பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 08 புதன்கிழமை (20.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 86

# மதவாச்சி போக்குவரத்துத் தடையை நீக்கக்கோரி கையெழுத்து வேட்டை!

## ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்ப ஏற்பாடு



வவுனியா,பெப்ரவரி20

வடக்கில் இருந்து நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குச் செல்வதற்கு அரசாங்கம் மதவாச்சியில் விதித்துள்ள போக்குவரத்துத் தடையை நீக்கக் கோரி நேற்று வவுனியாவில் பொதுமக்களிடம் கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டது.

வவுனியா நகரில் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து வேட்டையில் வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என்று மூவினங்களைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் ஞாயிறு முதல் பாண்விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.20

குடாநாட்டில் அடுத்த வாரம் முதல் பாணின் விலை ரூபா 48 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை கிலோவுக்கு ரூபா 81 ஆக கடந்த 11ஆம் திகதி முதல் குடாநாட்டில் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டது. எனினும், பாணின் விலை அப்போது உயர்த்தப்படவில்லை என்பது தெரிந்ததே.

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் பாண் மற்றும் பணிஸ் வகைகளின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன.

இதன்படி 450 கிராம் பாணின் விலை ரூபா 48 ஆகும். 150 கிராம் கிறீம் பணிஸ் ரூபா 25 ஆகவும் 130 கிராம் ரீ-பணிஸ் மற்றும் சங்கிலி பணிஸ் என்பன ரூபா 23 ஆகவும் 70 கிராம் கொம்பு பணிஸ் ரூபா 15 ஆகவும் ஸ்பொன்ஞ் கேக் ரூபா 12ஆகவும் அடைக் கேக் ரூபா 19 ஆகவும் விலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் படையினர் சுற்றிவளைப்பு; 2,000 பொதுமக்கள் வளைத்து பிடிக்கப்பட்டு விசாரணை!

அம்பாறை,பெப். 20

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று ஆலையடிவேம்புப் பகுதியை நேற்று மாலை திடீரெனச் சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் சுமார் இரண்டாயிரம் பொதுமக்களை வளைத்துப் பிடித்து பாடசாலை ஒன்றுக்கு கூட்டிச் சென்று விசாரணைக் குட்படுத்தினர்.

அக்கரைப்பற்றில் நேற்று அதிகாலை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அடையாளந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே விசேட அதிரடிப்படையினர் பெருமெடுப்பிலான சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

ஆலையடிவேம்புப் பகுதிக்கு வந்த பெரும் எண்ணிக்கையான படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்து பெரும் தேடுதல் நடவடிக் கையில் ஈடுபட்டனர்.

இரண்டாயிரம் பேர்வரையிலான பொதுமக்களை விசாரணைக்காக கோளாவில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் முன்நகர்வு முறியடிப்பு

வவுனியா,பெப்.20

மணலாறில் நேற்று செவ்வாய்க்கிழமை படையினர் மேற்கொண்ட முன்நகர்வுத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மணலாறில் கொக்குத்தொடுவாய், மண்கிண்டிமலை மற்றும் ஜனகபுர பகுதிகளில் படையினர் நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் தாக்குதலை தொடங்கினர். படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர தாக்குதலை நடத்தினர்.

படையினரின் நகர்வை மாலை 6 மணியளவில் விடுதலைப் புலிகள் முறியடித்தனர். படையினர் விட்டுச் சென்ற பெருமளவு ஆயுத தளபாடங்களை தாங்கள் மீட்டுள்ளனர் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த மோதல் குறித்து அரசாங்கத் தரப்பில் இருந்து நேற்றிரவு வரை தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (அ-2)

## நாசகார ஆயுதங்களை இந்தியா இலங்கைக்கு வழங்கவில்லையாம்!

### இணை அமைச்சர் இந்திரஜித் சிங் தகவல்

புதுடில்லி,பெப்.20

இலங்கைக்குப் பேரழிவு ஏற்படுத்தக் கூடிய நாசகார ஆயுதங்களை வழங்கப் போவதில்லையென இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது.

இந்தியாவின் ஆயுத உற்பத்திக்கான இணையமைச்சர் ராவ் இந்திரஜித்சிங் செய்தியாளர்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மோதல்கள் இடம்பெறுவதால் புதுடில்லி பேரழிவு ஏற்படுத்தக் கூடிய நாசகார ஆயுதங்களை இலங்கைக்கு வழங்காது எனத் தெரிவித்துள்ள அமைச்சர், அதேவேளை பேரழிவை ஏற்படுத்தாத ஆயுதங்களை இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளதை உறுதி செய்துள்ளார்.

மோதல் நடைபெறும் நாளொன்றுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முஸ்லிம், சிங்கள மாணவர்கள் அனுமதி

கொழும்பு,பெப்.20

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வடபகுதியின் குழப்ப நிலை காரணமாக கடந்த பல வருடங்களாக சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் குறித்த பீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும் - நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்த வருடம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் - என்றும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

போதிய ஆய்வுகூடம், வைத்தியசாலை வசதிகள் போன்ற வசதிகள் இன்மையால் யாழ். மருத்துவபீட வகுப்புகளைக் கொழும்பில் ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது - என்றும் அவர் கூறினார். (சி)

## திருமலையில் டெங்கு பரவுகிறது இதுவரை மூவர் உயிரிழப்பு!

திருகோணமலை,பெப்.20

திருகோணமலையில் டெங்கு நோயின் தாக்கமும் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருட ஆரம்பத்திலேயே அதிகமான நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளதுடன் 3 நோயாளிகள் இந்நோயால் இறந்துள்ளனர் என சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் தங்கள் ஆதரவையும், பங்களிப்பையும் நல்க வேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரி இ.சதிஸ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உவர்மலைப் பகுதியில் இருவரும் மூர் வீதியில் ஒருவரும் இறந்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### பாகிஸ்தான் தேர்தலில் முஷாரப் அணி நிராகரிப்பு

## பெனாஸிர், நவாஸ் கட்சிகள் முன்னணியில்; எனினும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது

இஸ்லாமாபாத்,பெப்.20

பாகிஸ்தானில் திங்கட்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கும் முன்னிலை பெற்றுள்ளன. எனினும் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சூழ்நிலை தோன்றியுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பிற்கு ஆதரவளிக்கும் அணி பின்தங்கியுள்ளது.

272 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் பெரும்பாலான முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு 86 ஆசனங்கள் கிடைத்துள்ளன. முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் கட்சிக்கு 66 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஜனாதிபதி முஷாரப் சார்பு பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (கீயு) அணிக்கு ஆக 49 ஆசனங்களே கிடைத்துள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரக்கட்டணம் உயராது; சபையில் அமைச்சர் தகவல்

கொழும்பு,பெப்.20

மின்கட்டணங்கள் 42 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது என ஊடகங்களில் வெளிவந்த செய்திகளில் உண்மையில்லை என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பாக இன்றுவரையில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இதுபற்றி நன்கு ஆராயப்பட்ட பின்னரே இலங்கை மின்சாரசபை

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரான பொலிஸ் கான்ஸ்டபிள் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, அக்கரைப்பற்று சனசமூக நிலைய வீதியில் வைத்து தமிழரான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று அதி காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.


நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கடமைக்காகச் சென்று கொண்டிருந்த - நான்கு பிள்ளைகளின் தந்தையான - கந்தையா தர்மலிங்கம் என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே சுட்டுக்கொல்லப்பட்டார்.

சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே இவர் மீது துப்பாக் கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

படுகாயமடைந்த இந்தக் கான்ஸ்டபிள் அக்கரைப்பற்று வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1974 | | 2008 |
| 06 | | 01 |
| 12 | | 22 |



### அமரர் செல்வராசா துளசிதாசன்

கடந்த 22.01.2008 அன்று சிவபதமடைந்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (21.02.2008) வியாழக்கிழமை இடம்பெறும்.

அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் கிழக்கு, கரவெட்டி. (71274) பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ/து)

### மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்

சமாசம் பதிவு செய்யப்பட்ட திகதி: 25/01/2006

1) கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்
2) யா.மா.கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க சமாசம் இணை அங்கத்தவர்கள்
3) ஏனையோர்

*காலம்:* 20/08/2005 - 31/12/2005
01/01/2006 - 31/12/2006
01/01/2007 - 31/12/2007

மேற்படி காலங்களுக்கான முடிவு கணக்குகளை சமாசம் மேற்கொள்வதற்கு வசதியாக இக்காலப்பகுதியில் சமாசத்துடன் ஏதாவது கொடுக்கல் வாங்கல் விபரங்களை யாராவது மேற்கொண்டிருப்பின் அது பற்றிய விபரங்களையும் 05/03/2008 ஆம் திகதிக்கு முன்னர் செல் மதி மீதிகள் ஏதும் இருப்பின் அவற்றையும் தெரிவித்து உறுதிப்படுத்தி கொள்ளுமாறு இத்தால் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தலைவர்,
யா.மா.கா.வ.கூ.ச.சமாசம்,
தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.
(சி/551531)

## யாழ்.சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரினால் விலங்கு விசர்நோயை தடுப்பதற்காக நாய்களை மலடாக்கும் திட்டத்திற்காக கேள்வி விண்ணப்பம் கோரல் - 2008

நாய்களை மலடாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கீழ் குறிப்பிட்ட விடயங்களைப் பின்பற்ற வேண்டும்.

01. பெண் நாய்களின் சூலகமும் கற்பப்பையும் அகற்றி விடும் சத்திர சிகிச்சைக்குட்படுத்தல் வேண்டும்.
02. மலடாக்கல் சத்திரசிகிச்சைக்குட்படுத்திய நாய்களை அறிந்து கொள்வதற்காக வலது பக்க காதின் மேற்சோணையில் V உருவத்தில் குறியீடு இடப்படல் வேண்டும்.
03. சத்திரசிகிச்சையின் பின்பு நாய் மயக்க நிலையிலிருந்து விடுபடல் வேண்டும்.
04. மேற்குறித்த விடயங்களை பொது சுகாதார உத்தியோகஸ்தர் குழுவினர் பரிசோதனைக்குட்படுத்தல் வேண்டும்.
05. மலடாக்கல் சத்திரசிகிச்சை நடைமுறைப்படுத்தும் மிருக வைத்தியர், உத்தியோகஸ்தர்கள் எமது திணைக்களத்தின் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
06. வேலைத்திட்டத்திற்காக கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது இம்மலடாக்கல் வேலைத்திட்டத்தை செய்யும் செயற் குழுவினருக்கு கீழ்க் காணப்படும் வசதிகள் அத்தியாவசியமானதாகும்.
   1. மிருக வைத்தியர் உத்தியோகஸ்தர்கள்
   2. மிருக வைத்திய உதவியாளர்கள்
   3. கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கு தொழிலாளர்கள்
   4. கிராம மட்டத்தில் வேலைத் திட்டத்தை நடத்துவதற்குப் போக்குவரத்து

இது தொடர்பான மேலதிக விவரங்களையும் கேள்விப் பத்திரங்களையும் இவ்வதிவிடத்தில் வேலை நேரத்தில் 29.02.2008 திகதிக்கு முன் பெற்று 05.03.2008 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 05.03.2008 காலை 10.00 மணிக்குத் திறக்கப்படும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
சுகாதார பிராந்திய பணிப்பாளர்.
(சி/551533)

# வவுனியாவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை

வவுனியா,பெப் 20

வவுனியா சிவபுரம் பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாரை நோக்கி கைக்குண்டுத் தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்படும் இரு இளைஞர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் பின்னர் அங்கு பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது பிஸ்டல் ஒன்றையும் மற்றும் கைக்குண்டு ஒன்றையும் மீட்டனர் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## அரசறிவியலாளன் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் 'அரசறிவியலாளன்' இதழ் 2 இன் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அரசறிவியல் ஒன்றியத்தின் தலைவர் த.பாலமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் வெளியீட்டுரையையும் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (1)

## பாடசாலைகளுக்கு இடையில் நாளை விவாதப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ். இந்துக் கல்லூரியின் விவாத மன்றம் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் விவாதச் சுற்றுப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் 16 இற்கும் மேற்பட்ட கல்லூரி அணிகள் பங்குபற்றவுள்ளன.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ,பெப்.20

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் க.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

## மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.சிறிவாசன் கலந்துகொள்வார். (1-231)

* * *

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முதன்மை நிலை இரண்டு, மூன்றுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி கலந்துகொள்வார். (202)

* * *

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் மா.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் கலந்துகொள்வார். (202)

**படிவம்**

சுவாமி விபுலானந்தர் இசைக் கல்லூரிக்கு அனுமதிப்பு விண்ணப்பப்படிவங்கள் படிவம் உண்டு.

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

**விற்பனையாகின்றது**

பௌதிகவியல் தரம் II
(2008 முதல்)
New G.C.E. O/L Exam
[illegible]
புத்தகசாலை,
[illegible]
தொ.பே. 9481 (சி/551535)

# முந்தலில் மின்மாற்றி வெடிவைத்துத் தகர்ப்பு!

கொழும்பு,பெப். 20

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் உள்ள முந்தல், மங்களவெளிய பகுதியில் உள்ள மின்மாற்றி ஒன்று நேற்று அதிகாலை வெடிபொருள்களைப் பயன்படுத்தித் தகர்க்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் உள்ள 1,500 வீடுகளுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டது.

இலங்கை மின்சார சபைக்கு சுமார் ஐம்பது லட்சம் ரூபாவுக்கு சேதம் ஏற்பட்டது என்று மதிப்பிடப்படுவதாக மின்சாரசபையின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சமயம் அங்கு கடமையில் இருந்தவர்கள் என்று கருதப்படும் இலங்கை மின்சார சபை ஊழியர்கள், முந்தல் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 6ஆம் திகதி அதிகாலை சிலாபம், ஆராய்ச்சிக்கட்டுவப் பகுதியில் ஒரு மின்மாற்றி இதேபோன்று தகர்க்கப்பட்டதும் -

அதற்கு சற்று நேரம் முன்னர் முந்தல் பகுதியில் மற்றொரு மின்மாற்றியில் வெடிப்பொருள்கள் பொருத்தப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டிருந்ததும் - குறிப்பிடத்தக்கவை.

அண்மையில் கல்கிஸைப் பகுதியிலும் ஒரு மின்மாற்றி வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை தெரிந்ததே. (சி)

## வாழ்வளிக்கக் காத்திருக்கும் வாய்ப்புகள்

வாழ்வில் வெற்றிபெறத் துடிக்கும் இளமையும் துடிப்பும் மிக்க ஆற்றல் மிகு இளைஞர்களே! யுவதிகளே!

'வேலை இல்லை' எனும் மந்திரத்தை இனிமேல் மறந்துவிடுங்கள்!!

பிரபல காப்புறுதி நிறுவனம் அதன்

**சந்தைப்படுத்தல் துறையில்** சாதனையாளர்கள் வரிசையில் உங்களுக்கும் ஓர் அற்புதமான வாய்ப்பினை வழங்கக் காத்திருக்கின்றது.

அனுபவம், தகுதி, அடிப்படையில் சம்பளம் மற்றும் இதர அனுகூலங்கள்

விண்ணப்ப முடிவுத் திகதி 26.02.2008

''சாதனை படைக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிடாதீர்கள்''

மே/பா. 3062
உதயன்
(71272)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா தங்கராசா

(முன்னாள் முகாமையாளர், பூனியன் இரும்பு வாணிபம்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தங்கராசா நேற்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் கோமவதி, பிறேமாவதி(ஆசிரியை - ஹட்டன்), சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (முன்னாள் நிதி உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி), ஜெயராம் (சட்டத்தரணி, ஹட்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிதா (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), காந்திமதி (கனடா), கமலராணி (அமெரிக்கா),கலாமோகன்(கனடா), ருசான், தனுசியா, விக்கினேஸ்வரன் (கனடா) விக்கினேஸ்வரன் (அமெரிக்கா), தாட்சாயினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் கௌசிகா(கனடா), திவ்யா(கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(21.02.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் நுணியன் நேரிய தூபு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (71275)
தகவல்: கோமவதி வேலாயுதபிள்ளை (மகள்)

## திருமதி மரியமுத்து நீக்கிலாப்பிள்ளை



கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் 131 ½, புதுச்செட்டித் தெரு, கொழும்பு 13 ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி மரியமுத்து நீக்கிலாப்பிள்ளை 17.02.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபரிமுத்து நீக்கிலாப்பிள்ளையின் (புகையிரத பண்டகசாலை பொறுப்பாளர்) அன்பு மனைவியும் ரூபகுமார்(கனடா), அமலகுமார்(கனடா), மரியவதனி(சுவிஸ்), பிரதீப்குமார்(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு அன்னையும் காலஞ்சென்ற எதிர்வீரசிங்கம், காலஞ்சென்ற அன்னம்மா, திருமதி செல்வராணி போல், செல்வரத்தினம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்செலன் சிறிதரன்(சுவிஸ்), லூலியட்(கனடா), கரோலின்(கனடா), நியூடினி(கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் நிக்ஷன், சபினா, கிருஷாந், நோயல், லக்ஷி நோறா, லக்ஷன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19-20 திகதிகளில் அஞ்சலிக்காக A.F.Remonds இல் வைக்கப்பட்டு பின்னர் அன்னாரின் பூதவுடல் கரணவாய் கிழக்கு கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு 22.02.2008 வெள்ளி காலை 8.30 மணியளவில் கரவை தேவமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கரவை சென்.மேரிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் கிழக்கு, கரவெட்டி. (சி/551534)
தகவல்: திருமதி அ.மெலனி (பெறாமகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டு வெடிப்பில் பலியான நால்வருக்கும் இன்று அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்.மாவட்ட வருமானப் பரிசோதகர் வருமான மேற்பார்வையாளர் சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி. தென். மேற்கு பிரதேச சபை (மானிப்பாய்) கலா சார மண்டபத்தில் நடைபெறும்.

திருநெல்வேலியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான சங்கச் செய லர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் மற்றும் அங்கத்தவர் ஆகிய நான்கு பேரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் இதனால் ஏற்பட்ட பதவி வெற்றிடத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறு மென சங்கத் தலைவர் செ.சந்திரகுமார் அறிவித்துள்ளார். (அ-207)

## தொழிற்பயிற்சி நெறி பயிலுநர் கொடுப்பனவு

சங்கானை, பெப்.20

ஜனாதிபதி செயலக நிதி உதவியுடன் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் 2006 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற வீட்டு மின் இணைப்பு பயிற்சிக்கான கொடுப்பனவு கள் பருத்தித்துறைப் பிரதேச செயலகத் தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவிலும், மோட்டார் சைக்கிள் திருத்து தல் பயிற்சிக்கான கொடுப்பனவுகள் கர வெட்டி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் வழங்கப்படும். பயிலுநர்கள் தங்களுக் குரிய கொடுப்பனவுகளை நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு திட்ட உதவியாளர் இ.கிருஷ்ணதாஸ் கேட்டுள்ளார். (அ-29)

## குடாநாட்டில் உருளைக்கிழங்குச் செய்கை நல்ல விளைச்சல் தந்துள்ளதாக மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.20

குடாநாட்டில் பயிரிடப்பட்ட உருளைக் கிழங்கு செய்கை நல்ல விளைச்சலை ஈட்டிக் கொடுத்திருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்த உள்ளூர்உருளைக்கிழங்கின் அறு வடை தற்போது இடம்பெற்று வருவதால் சந்தைகளில் அதன்விலை ஓரளவு குறை வடைந்து காணப்படுகிறது.

திருநெல்வேலி மற்றும் மருதனார் மடம் சந்தைகளில் இந்த உள்ளூர் உரு ளைக்கிழங்கு கிலோ 80 ரூபாவாக விற் கப்படுகின்றது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த உருளைக்கிழங்கு சந்தைக்கு விற்பனைக்கு வந்ததை அடுத்து கொழும்பில் இருந்து கப் பல் மூலம் தருவிக்கப்படும் உருளைக் கிழங்கின் விலை திடீரென கிலோ 100 ரூபா வாக வீழ்ச்சியடைந்துள்ளது. (202-224)

## மந்துவில் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.20

மந்துவில் பிரதேச இளைஞர் யுவதிக ளுக்கான தொழில் வழிகாட்டலும் ஆரோக் கியமான வாழ்வும் தொடர்பான விழிப்புணர் வுக் கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு மந்துவில் றோ.க.த.க. பாடசாலை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

மந்துவில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த. டெஸ்மன்ட் தவசிறோஜன் தலைமையில் நடபெறும் இந்த நிகழ்வில் உளவளத் துணையாளர் சி. கதிர்காமநாதன், வடமராட்சி கல்வி வலய சேவைக் கால ஆசி ரிய ஆலோசகர் உ.சிவநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

'சொண்ட்' நிறுவன அனுசரணையுடன் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.(202-207)

## பனையிலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.20

பனை மரத்தில் ஏறியபோது தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் இரு கால்களின் செயற்பாடுகளை இழந்தார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மிருசுவில் உச னில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த 57 வயதான குடும்பஸ்தர் ஒருவரே மரத்திலிருந்து வீழ்ந்தவராவார்.

பனை மரத்தில் மிதித்து ஏறுவதற்காக பொச்சு வைத்து கட்டப்பட்டிருந்த கயிறு அறுந்ததால் நிலத்தில் வீழ்ந்ததாகத் தெரி விக்கப்பட்டது.

இடுப்பு எலும்பு பகுதியில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிகசிகிச் சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (202-207)

## ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கென

# 'கியூமெடிக்கா' மேற்கொண்ட வீட்டுத் திட்டத்தை பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு கோரிக்கை

பருத்தித்துறை, பெப்.20

பருத்தித்துறை பிரதேச பிரிவுக்குட் பட்ட கற்கோவளத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக் கென 'கியூமெடிக்கா' நிறுவனம் வீடுகளை நிர்மாணித்து வந்தது. இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நிர்மாணப் பணிக ளைப் பூர்த்தி செய்து வீடுகளைப் பயனா ளிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கு மாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கற்கோவளம் கிராம அபிவிருத்திச் சங் கம் யாழ்.அரச அதிபர் கே.கணேஸிடம் மக ஜர் மூலம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கற்கோவளத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை மேற் கொள்ள 'கியூமெடிக்கா' நிறுவனம் முன் வந்தது. இவ்வாறு 203 குடும்பங்களிற்கு வீடுகளைக் கட்ட 'கியூமெடிக்கா' நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஆனால் 130 வீடுகளே கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 73 வீடுகளில் சில அத்தி பாரம் போடப்பட்ட நிலையிலும் சில கூரை கள் போடப்பட்ட நிலையிலும் உள்ளன.

இந்த வீடுகள் கட்டி முடிக்கப்படாமை யினால் பாதிக்கப்பட்ட இந்த மீனவக் குடும்பங்கள் இன்னல்களை அனுபவித்து வருகின்றன. எனவே இந்த வீடுகளைப் பூர்த்தியாக்கி இக்குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுள் ளது. (202-218)

## தென்னிந்திய திருச்சபை வழக்கில் எதிர் மனுதாரருக்குப் பிடியாணை

யாழ்ப்பாணம்,பெப்.20

தென்னிந்திய திருச்சபை தொடர்பான பிரச்சினை சம்பந்தமான வழக்கில், பிர தான எதிர்மனுதாரருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தென்னிந்திய திருச்சபையில் இருந்து விலகிச் சென்ற சிலர் அமெரிக்கன் திருச் சபை என்ற பெயரில் செயற்பட்டுவரு வதற்கு எதிராக யாழ்.மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத்தடை உத்தரவு ஒன்றை ஏற்கனவே பிறப்பித்திருந்தது.

இந்த வழக்கு யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் மனுதாரர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமது வாதங்களை முன்வைத்தார்.

வழக்கின் பிரதான எதிர் மனுதாரர் மூன்று தடவைகள் நீதி மன்றத்தில் சமுகமளிக்கவில்லை. அத்துடன் நீதிமன் றம் வழங்கிய இடைக்காலத் தடைக்கு முரணாகச் செயற்பட்டு, நீதிமன்றத்தை அவமதித்துள்ளார். அவரை நீதி மன்றத்தில் ஆஜர் செய்ய பிடியாணை பிறப்பிக்க வேண்டும் என்று விண்ணப்பித்தார்.

அதனை ஆராய்ந்த நீதிபதி, பிரஸ்தாப எதிர் மனுதாரருக்குப் பிடியாணை பிறப் பித்து வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வழக்காளியின் சார்பாகச் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடன் ஏ.ராஜரட் ணம், திருமதி ஷாமய்ன் குணரட்ன, சுரேஸ் பெர்ணான்டோ, செல்வி கம்சனி வாமதேவன் ஆகியோர் ஆஜராகியிருந் தனர். எதிராளியின் சார்பில் சிரேஸ்ட சட் டத்தரணி எஸ்.ரட்ணவேல் ஆஜராகியிருந் தார். (அ-1)



புனரமைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க குருநகர் பரிசுத்த காணிக்கை மாதா ஆலயத்தை யாழ்.ஆயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அபிஷேகம் செய்வதைப் படத்தில் காணலாம்.

## இந்தியப் பல்கலைக்கழக அனுமதிக்கு யாழ்.மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.20

இந்தியாவின் கர்நாடகாவில் உள்ள பெங்களூர் மற்றும் தமிழ் நாடு பல்கலைக் கழகங்களில் உயர் கல்விகற்க விரும்பும் இலங்கை மாணவர்களிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பட்டப் படிப்பு, பட்டப்பின் முதுகல்வி, டிப்ளோமா துறைகளில் கல்விகற்க விரும் பும் யாழ் மாணவர்கள் யாழ்.மாவட்ட "சேவா லங்கா" நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தெரிவுக்கான விண்ணப்பங் களை அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பட்டக்கல்வி (Under Graduate Course) கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட் பம், இலத்திரனியல் தொடர்பாடல், கணி தம், பௌதிகம், இரசாயனம், உயிரியல், விடுதிமுகாமைத்துவம், மருத்துவத்துறை, வர்த்தகம், வங்கியியல், ஊடகவியல், ஆங் கிலம், தமிழ், உளவியல், சமூகவியல், கல்வி, சட்டம், பொறியியல் துறை ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

முதுமாணி கற்கை நெறியில் M.C.A M.Com, M.Com (Computer Application), M.A (ஆங்கிலம், தமிழ்), M.B.A, M.Sc (கணித, விஞ்ஞான பாடத்துறைகள்) M.Pharmacy, Master of Physio Therapy சுற்றுலா நிர்வாகம், சமூக சேவை போன்ற துறைகளுக்கும்-

டிப்ளோமா நெறியில், இலத்திரனிய லும் தொடர்பாடலும், மின்னியலும் இலத் திரனியலும், கணனி விஞ்ஞானம், ஓட்டோ மோபைல், கட்டடக்கலை, தக வல் தொழில் நுட்பம், எக்ஸ்றே தொழில் நுட்பம், பல் மருத்துவம், பொதுத்தாதிய மும் குடும்ப நலமும் ஆகிய துறைகளுக் கும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202-302)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆண்டுக்கான இலக்கியப் போட்டி

நல்லூர், பெப்.20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆண்டுக்கான தேசிய இலக்கியப் போட்டி விரைவில் நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கலைஞர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு போட்டிக்கான ஆக்கங்களை அடுத்த மாதம் 26 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு நல்லூர் பதில் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் இலக்கியப் போட்டிகள் இந்த வருடமும் பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடத்தப்படவுள்ளன.

கட்டுரை (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகள்), கவிதை (கனிஷ்ட, சிரேஷ்ட, திறந்த பிரிவுகள்), சிறுகதை (கனிஷ்ட, சிரேஷ்ட, திறந்த பிரிவுகள்), பாடவிளக்கம் (திறந்த பிரிவு) ஆகிய போட்டிகள் நல்லூர் பிரதேச செயலர்பிரிவில் வரையறுக்கப்பட்ட/திறந்த போட்டிகளாக [illegible] பங்குபற்ற விரும்பும் கலைஞர்கள் [illegible] திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பஸ்ஸில் தவறவிடப்பட்ட பணத்தைப் பெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.20

தென்மராட்சிப் பிரதேசத்திற்கான சேவை யில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்றிலிருந்து பயணிகளால் தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் எடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டி பிரதேச செய லாற்று முகாமையாளரிடம் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வட பிராந்திய செய லாற்று முகாமையாளர் எஸ்.கமலேந்திரன் கேட்டுள்ளார். (202)

## நீதி நூல் மனனப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.20

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத் திக்கழகம் வருடாந்தம் நடத்தும் நீதி நூல் மனனப்போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கு நடை பெறும் இப்போட்டிக்கு பல்வேறு பாடசாலை களைச் சேர்ந்த சுமார் 650 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (202-207)

## இளவாலை றோ.க.பாடசாலையில் சிங்கள மொழிப்பயிற்சிகள்

வலி.தென்மேற்கு,பெப்.20

இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் முறைசாராக் கல்வித் திட்டத்தின்கீழ் சிங்கள மொழி பயிற்சி வகுப்பு கடந்த வாரம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பிற்பகல் 3 மணி முதல் மாலை 6மணி வரை இப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதாகவும், ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற முடியும் என் றும் பாடசாலையின் அதிபர் செல்வி சாந்தா அன்ரனி தெரிவித்துள்ளார். (202-135)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, பட்டப் பின் படிப்புக்கள் பீட கல்வியாண்டு 2007/ 08 இற்கான பொதுநிர்வாகத்தில் முதுகலை மாணி கற்கைநெறிக்குரிய இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் எதிர் வரும் சனிக்கிழமை ஆரம்பமாகும் என பீடாதிபதி தெரிவித்துள்ளார். (202)

## கரவெட்டிப் பிரதேசத்தில் தொழிற்பயிற்சி நிலையம்

வடமராட்சி, பெப்.20

யாழ்.தொழில்நுட்ப நிறுவன தொழிற் பயிற்சி நிலையத்தின் கிளை கரவெட்டி இராஜகிராம வீதியில் உள்ள நீல இல்லத் தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இளைப்பாறிய தபாலதிபர் வி.சி.வீரசிங் கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் இ.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கிளையைத் திறந்துவைத்தார். (202-160)

## G.T.Z அனுசரணையுடன் ஆண்களுக்கான கடலக இயந்திரவியல் தொழில்நுட்பவியல் பயிற்சி


மேற்படி பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்கள் பூர்த்திசெய்யப்பட்ட சுயவிவரங்களை 05.03.2008 புதன்கிழமைக்கு முன் கீழ்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

வயதெல்லை - 18 - 35
பயிற்சிக்காலம் - மூன்று மாதங்கள்

உதவிப் பணிப்பாளர்,
கடற்றொழில் மற்றும்
கடலோட்டு எந்திரவியல் கல்லூரி,
இல: 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 6251
(71250)


## மரண அறிவித்தல்

### கலாபூஷணம் கந்தையா உருத்திராபதி



தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா உருத்திராபதி 18.02.2008 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் கந்தையா - சீதேவி தம்பதியரின் மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் சிவஞானம், செல்வஞானம், ஆனந்தராசா, கமலாவதி, தங்கவேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திராதேவி, ராதா, அபரஞ்சிதா, சற்குணரட்னம், சாரதா (லண்டன்) ஆகியோரின் மாமனும் பூமணி, சிவசம்பு (கனடா), யோகம், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, தெய்வேந்திரம், பவளம் ஆகியோரின் சகோதரனும் பிரேமதாஸ் கல்யாணி (சுவிஸ்), சுதர்சன், சுசிதர் தாட்சாயினி (கனடா), அனேஜா, நவநீதன் பிரதீபா (கனடா), பிரசன்னா (டோகா), செந்தூரன் லதா (கனடா), பிரியாந்தன், திவாகரன், புகழினி, அருணன், திலக்சன், திவ்யா ஆகியோரின் பேரனும் ஆர்ஜா, மானுஜா, அஜய் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய். (71251)
தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
1949★04★08

ஆண்டவன் அடியில்
2008★01★21

அமரர்
### யோசேப்பு அன்ரனி

குடும்பத்தின் குலவிளக்கே - எம்
கோவிலில் குடியிருந்தவரே
தேவனின் பாதம் தேடி ஏகினீரே
தேற்ற நமக்கு யாருளர்!

திருமுகம் கண்டு ஒரு
திங்கள் ஆனதே
ஆறுமோ எம் துயர்
ஆற்ற நீர் வாரீரோ!

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (20.02.2008) புதன்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். பின்னர் நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 165, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(71255)

என்றும் உம் பிரிவால் துயருறும்:
மனைவி, [illegible]
மைத்துனர்மார், [illegible]
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.


## விற்பனைக்கு

ஸ்ரீ XXXX தொடரிலக்கமுடைய இசுசு லொறி, 43- m.m.c சுண்டர் (14½ அடிநீளம்), 270-மெசிபெக்ஸ்சன் உழவு இயந்திரம் (பெட்டியுடன்) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 63, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். T.P.: 077 7754099 (71252)

## திருமண சேவை

மகம், 17½ பாவம், சுவிஸ் P.R. உள்ள 1981இல் பிறந்த மணமகனுக்கும் 1975இல் பிறந்த எஞ்சினியர் (செவ்வாய்க் குற்றமற்ற) மணமகனுக்கும் மணமகள் தேவை. எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமகளும் மணமகன்களும் உத்தியோகத்தர்களும் எல்லா மத மணமக்களும் உண்டு. குறிப்பு: படத்துடன் தொடர்புகொள்ளவும்.

துர்க்கா திருமணசேவை, 9, சங்கிலியன் வீதி, நல்லூர்.
T.P.: 021 4591417

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 21.02.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
* P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.


## வெங்காயத்தின் விலை வீழ்ச்சி

திருநெல்வேலிச் சந்தையில் சிறிய ரக வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு கிலோ வெங்காயம் ரூபா 50 ஆக விற்பனை செய் யப்பட்டு வந்தது. தற்போது கிலோ ரூபா 20 தொடக்கம் 25 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை பெரிய வெங்காயம் (பம்பாய்) கிலோ ரூபா 40 ஆக விற்பனை செய்யப்படுகிறது. (202-51)

## நிர்வாகிகள் தெரிவு

குருநகர்,பெப்.20

ஊர்காவற்றுறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய வருடத்திற்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. புதிய தலைவராகச் செபஸ்தியாம்பிள்ளை யூட் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (202-51)

* * *

குருநகர்,பெப்.20

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த வருடத்துக்கான நிர்வாகத் தெரிவின்போது தலைவராக டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பதவிவழியாகவும் திருமதி கு. சறோஜா செயலாளராகவும் பொருளாளராக ம.ஞானசீலனும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (202-51)


## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகளை (Parcel) கொழும்பு - யாழ். - கொழும்பு தினசரி விமானமூலமாகஉடனடியாக ஏற்றி இறக்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D பெற்று உத்தரவாதத்துடன் ஏற்றி இறக்கப்படும். உங்களுக்குத் தேவையான சகல விமான பொருள்கள் கொழும்பிலும் யாழிலும் இருந்து கொள்வனவு செய்து தரப்படும். பூதவுடல்களும் விமானமூலமாக எடுத்துச் செல்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். அவசர தேவைகளுக்காகத் தனிவிமானம்/ஹெலிக்ஹொப்டர் சேவைகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

(அ/551529)

EURO FLIGHT AND CARNO (PVT) LTD

NO.35, STATION ROAD, MOUNTLAVINIA,
TEL.: 011 4542190, 077 3846998 FAX: 011 4542360

NO 11, VIHARA LANE, COLOMBO - 06
TEL.: 0114969116

NO.22, WYMAN ROAD, NALLUR, JAFFNA.
TP/FAX: 021 222 3974, 011 498327


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கந்தையா சிவதாசன் (சிவா)

(தலைவர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய்)




எமது சங்கத்தின் தலைவராகக் கடந்த மூன்று வருடங்களாக அரும்பணியாற்றிய கந்தையா சிவதாசன் அவர்கள் 18.02.2008 அன்று திங்கட்கிழமை இறைவனடி எய்திவிட்டார். இதனால் நாம் ஆறாத் துயரடைந்துள்ளோம். இவரது பணி இன்னொருவரால் ஈடுசெய்யமுடியாதது. இவரது பேரிழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

நிர்வாக சபை உறுப்பினர்களும், பணியாளர்களும்
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய். (71260)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 | 21 |
| 11 | 01 |
| 1952 | 2008 |



### அமரர் காசிப்பிள்ளை சோதிராசா

எங்கள் குடும்பத்தின் சிகரமே!
எம் உயிரில் உங்கள் நினைவிருக்கும்.

கடந்த 21.01.2008 அன்று காலமான எங்கள் குடும்ப சிகரத்தின் இறுதிப் பயணத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றிகள். இன்று (20.02.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

306, கண்டிவீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (71253)
குடும்பத்தினர்.


## COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Siramhyadi Lane, Jaffna Branch : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science, 5 Months, ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing, 4 Months, ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing, 4 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD, 3 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office, 3 Months, 1,500 | Accounting Package, 3 Months, ~~10,750~~ 2,150 |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 22/02/2008 2PM
Batch II : 23/02/2008 1PM
Batch III : 24/02/2008 1PM
Batch IV: 27/02/2008 2PM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தோற்றுப்போன தந்திரோபாயத்தை மீளப் பரீட்சித்துப் பார்க்கும் முயற்சி

இலங்கையை ஆட்டிப்படைத்துவரும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ அரசு வகுத்துள்ள தந்திரோபாயம் அப்பட்டமானது; வெளிப்படையானது; துலாம்பரமாகத் தோற்றுவது; வெளி வெளியாகப் புலப்படுவது.

'எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறிவிழுந்தாராம்' - என்ற மாதிரி, பல்வேறு தரப்புகளும் முயற்சித்துத் தோற்றுப்போன அதே உத்தியை 'ராஜபக்ஷ அண்ட் பிறதர்ஸ் கம்பனி' தானும் தத்தெடுத்து ஒரு தடவை நம்பிக்கையோடு முயற்சித்துப் பார்க்கின்றது போலும்.

ஜே.ஆர். ஜயவர்த்தனா, ஆர். பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்க என்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் வரிசையாக எத்தனித்துப் பட்டுத் தெளிந்த சாணக்கிய - கௌடில்ய - தத்துவத்தை ராஜபக்ஷ சகோதரர்கள் தாமும் தப்பாமல் ஒரு தடவை முயற்சித்துப் பார்க்கின்றார்கள்.

ஈழத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூல - மைய - சக்தியாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக ஓரம் கட்டி, ஒதுக்கி, இராணுவ ரீதியாக அவர்களைத் துவம்சம் செய்து, தனது அடிவருடிகளை அதிகாரத்தில் இருத்தி, அவர்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அடையாளப்படுத்துவதன் மூலம், அவர்கள் வாயிலாகத் தான் விரும்பும் தீர்வைத் திணித்து, அதனை நடைமுறைப்படுத்த் வைத்து, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டாயிற்று என்று காட்டுவதும், சமாளிப்பதுவுமே அந்த 'இராஜதந்திர' திட்டமாகும்.

இதையே,'புலிப் பயங்கரவாதத்துக்கு இராணுவத் தீர்வு; இனப்பிரச்சினைக்கு சமரசத் தீர்வு' - என்ற சாரப்பட வெளிப்படுத்தி பறைசாற்றி வருகின்றது மஹிந்த நிர்வாகம்.

ஆனால், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் நலன்களையும், அபிலாஷைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய விடுதலை இயக்கமாக எழுச்சிபெற்று, விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். அதுவே யதார்த்தப் புறநிலையாகும். இதைப் புரியாமல் திட்டம் தீட்டுகின்றது கொழும்பு.

ஈழத் தமிழர்களின் அரசியல் தலைவிதியை நிர்ண யிக்கும் ஏகத் தகுதியிலிருந்து புலிகளை ஒதுக்கி, அவர்களைத் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் கொழும்பின் பகற்கனவு சாத்தியப்படக்கூடியதா என்பதே கேள்வி.

கொழும்பு மாத்திரமல்ல - முன்னைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் மாத்திரமல்லர் - புதுடில்லி கூட நேரடியாகத் தலையிட்டுத் தோற்றுப்போன 'தந்திரோபாயம்' இது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தைப் போட்டுக் குழப்பியடித்து, கையறு நிலைக்குக் கொண்டு சென்ற கிழட்டு இராஜதந்திரப் புலியான ஜே.என்.டிக்ஸிற்றே, இத்தகைய தந்திரோபாயத்தின் சறுக்கலை - தோல்வியை - காலம் கடந்த ஞானமாகப் பட்டறிந்து பின்னர் ஒப்புக்கொள்ள வேண்டியவரானார்.

இலங்கையில் இந்தியாவின் நேரடித் தலையீடு மற்றும் ஆக்கிரமிப்புக் காலத்தில் கொழும்புக்கான தூதுவராக இருந்த ஜே.என். டிக்ஸிற், அந்த இராஜதந்திர சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 'கொழும்பில் எனது பணி' என்ற தனது பட்டறிவுப் பகிர்வு நூலில் தாம் வகுத்த அந்தத் தந்திரோபாயத்தையும் அதன் தோல்வியையும் இப்படி ஒப்புக்கொள்கின்றார்.

*''பேச்சுகள் வாயிலாகப் பெறக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்கு கொள்ளப் போவதில்லை என நான் நம்பினேன். அதனால் விடுதலைப் புலிகளை ஒதுக்கி, ஓரம்கட்டிவிட்டு ஏனைய (தமிழ்க்) குழுக்களுடன் இந்தியா உறவை வைத்துக்கொள்ள வேண்டும் என நான் கருதினேன். இந்தியாவின் அரசியல் முயற்சிகளில் மற்றைய குழுக்கள் பங்குகொள்ளும் அதேவேளை, விடுதலைப் புலிகள் ஆரம்பக்கட்டத்தில் வெற்றிகரமாக ஒதுக்கப்படுவார்களாயின் அவர்கள் சமாதான வழிமுறையில் பங்கு கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என நான் கருதினேன். எனது இந்த மதிப்பீடு தவறானதாகும். இலங்கைத் தமிழர்களிடமிருந்து விடுதலைப் புலிகளை வெற்றிகரமாக ஓரம்கட்டி விடலாம் என்ற எனது எதிர்பார்ப்பும் தவறாக முடிந்தது. ஏனென்றால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுதி தளராத, நீடித்து நின்று போராடும் திறனாற்றலுக்குப் பக்கபலமாக இலங்கை - இந்திய அரசியலில் எத்தகைய சக்திகளின் நீரோட்டங்களும் உள்நோக்கங்களும் செயற்பட்டிருக்கக்கூடும் என்பதை என்னால் எடைபோட முடியவில்லை.''*

- இப்படிக் கூறியிருக்கின்றார் ஜே. என். டிக்ஸிற்.

டிக்ஸிற்றின் இந்த அனுபவத்தைப் படிப்பவர்கள், இதே நிலையில் தான் புலிகளை இப்போது மஹிந்தரின் நிர்வாகமும் கையாள - கட்டுப்படுத்த - எத்தனிக்கின்றது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்வார்கள்.

எத்தனை துன்பங்கள், இடர்பாடுகள், இடையூறுகள் வந்தாலும் அவற்றுக்கு மத்தியில் தனது மக்களின் அரசியல் இலக்கை - இலட்சியத்தை - முன்னெடுத்துச் செல்லும் அபாரமான துணிச்சலும், திடசங்கற்பமும், பற்றுறுதியும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இயல்பாகவே கைவரப் பெற்றுள்ளன.

தணியாத விடுதலை வேட்கை, தீராத சுதந்திர வெறி, போர்த் தந்திரோபாய மதிநுட்பம், பேரிடர்களையும் தாங்கும் தளராத மனவுறுதி என்ற உன்னத - உயரிய - இயல்புகளோடு விடுதலைப் பாதையில் மிகத் தெளிவுடன் இருக்கும் அரசியல் தலைமையை ஒதுக்கி, ஓரம்கட்டிவிட்டுத் தீர்வு காண்பது என்ற கனவு 'அலை ஓய்ந்த பின்னர் குளிக்கலாம் என்று காத்திருக்கும்' நிலைக்கு ஒப்பானதாகும். இரண்டுமே சாத்தியப்படப்போகும் புற யதார்த்தங்கள் அல்ல.

முன்னைய ஜனாதிபதிகளைப் போல - டிக்ஸிற்றைப் போல - 'ராஜபக்ஷ அன்ட் பிறதர்ஸ் கம்பனி' யும் இந்தப் பட்டறிவுப் பாடத்தைப் படிப்பதற்கு அதிக காலம் பிடிக்காது என்று எதிர்பார்க்கலாம்.

## குடாநாட்டுப் பாடசாலைகளில்

# முதலாம் தவணை முடிவடைகின்ற நிலையிலும் பாடப் புத்தகங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை

## 53 வீதமானவையே வந்து சேர்ந்துள்ளன

யாழ்ப்பாணம்,பெப்.20

குடாநாட்டுப் பாடசாலைகளில் முதலாம் தவணை முடிவடைகின்ற நிலையில் 53 வீதமான பாடப்புத்தகங்களே இங்கு எடுத்துவரப் பட்டுள்ளன என்று வலயக்கல்விப் பணிப்பாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் ஒன்று அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றது.

அதன்போதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:-

முதலாம் தவணை முடிவடைகின்ற நிலையிலும் எமது மாணவர்களுக்குரிய பாடப்புத்தகங்கள் முழுமையாக வந்து சேரவில்லை. 53 வீதமானவையே வந்துள்ளன.

எஞ்சியவற்றில் தரம் 7,11 ஆகிய வகுப்புகளுக்கு உரிய புதிய பாடத்திட்டப் புத்தகங்கள் 30 வீதம் வந்து சேரவேண்டும். அவை இன்னும் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேரவில்லை.

இது தவிர ஏனைய வகுப்புகளுக்குப் பழைய புத் தகங்கள் மூலமே கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்த போதிலும் பெரும்பற்றாக் குறையே நிலவி வருகின்றது. பழைய புத்தகங்களைப் பயன்படுத்திய போதிலும் மாணவர்களுக்கு அவற்றை முழுமையாக வழங்கமுடியவில்லை.

இந்நிலையில் மாணவர்கள் கற்றலை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். - என்று சுட்டிக் காட்டினார்.

இதேவேளை - இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளான வவுனியா வடக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு புதிய பாடத்திட்ட பாடநூல்கள் உட்பட பாடப்புத்தகங்கள் அனைத்தும் வந்து சேர்ந்துள்ளன என்று அந்த வலயங்களின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (203)

# இளைப்பாறிய அதிபர்,ஆசிரியர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்

## மாகாணசபைப் பிரதம செயலாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.20

வடக்கு மாகாணத்தில் இளைப்பாறிய அதிபர்,ஆசிரியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு வடக்கு மாகாணசபைப் பிரதம செயலாளர் இ. ரங்கராஜன் வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

இளைப்பாறிய அதிபர், ஆசிரியர்கள் தமக்கு ஓய்வூதியம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.எனவே இதனை உரிய வலய கல்விப் பணிப்பாளர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இளைப்பாறியவர்களின் ஓய்வூதியத்தை எவ்வளவு விரைவில் வழங்க முடியுமோ அவ்வளவு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. அதிபர்களுக்கு வழங்குவதிலேயே பிரச்சினைகள் உள்ளன.

அவர்களின் கையிருப்புகளை எடுப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாகவே அவர்களுக்கான ஓய்வூதியங்களை வழங்குவதிலும் தாமதம் ஏற்படுகின்றது.

இவர்களுக்கும் காலம் தாழ்த்தாது விரைவில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் வடக்கு மாகாண சபையில் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இடம்பெற்ற கூட்டத்திலேயே மேற்கண்ட விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. (203)

## கண்டெடுத்த மருத்துவச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், பெப்.20

திருமதி கே.வசந்த ரூபா என்பவருடைய அப்பலோ வைத்தியசாலையால் வழங்கப்பட்ட மருத்துவ சான்றிதழ் யாழ்.நவீன சந்தையில் மு.கமலநாதன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் 175க்கும் அதிக புள்ளி பெற்ற மாணவர் கல்விச்சுற்றுலா

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 175புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்ற மாணவர்கள் இந்தோனேசியாவிற்குக் கல்விச்சுற்றுலா மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரை வடக்கு மாகாண சபைக் கல்விச் செயலாளர் இ.இளங்கோவன் கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 13 மாணவர்கள் இதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர் என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் முதன்மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களே இவ்வாறான கல்விச்சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதுண்டு. இம்முறையே முதற் தடவையாக 175 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் கல்விச்சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (203)

# முதுமாணிக் கற்கைக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.20

முதுமாணி 2007 - 2008 ஆம் கல்வி ஆண்டிற்கான புது மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள் பீடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பட்டப்படிப்புகள் பீடாதிபதி கே.கந்தசாமி தலைமையில் நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறுகின்றன.

முதுமாணியில் அபிவிருத்திக் கற்கை (MA.Development) முதுமாணியில் பிராந்தியத் திட்டமிடல் (M.A.Regional Planning), முதுமாணியில் சனத்தொகை (M.A.Population) ஆகிய மூன்று கற்கை நெறிகளுக்கும் 50 மாணவர் வீதம் 150 பேர் புதிய கல்வியாண்டிற்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு 1020 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கடந்த கல்வியாண்டில் மேற்படி 3 கற்கை நெறியிலும் பரீட்சை எடுத்தவர்களுக்கு விரைவில் பெறுபேறு வெளியாகவுள்ளது.(202-95)

## சட்டத்துறை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்.பல்கலைக்கழகச் சட்டத்துறை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி இங்கு ஆரம்பமாகவுள்ளன. பல்கலைக்கழக வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

கற்கை நெறிக்குத் தெரிவான மாணவர்களைச் சமுகமளிக்கும்படி பல்கலைக்கழக வட்டாரங்கள் கேட்டுள்ளன.

இதேவேளை-இரண்டாம் அரை ஆண்டிற்கான விரிவுரைகளை இந்த மாத இறுதியில் கொழும்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203)

# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், பெப்.20

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா கலந்துகொள்வார்.

ஆசியுரையைப் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய குரு மு.பாலகுருசாமி சர்மாவும் வாழ்த்துரையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் நிகழ்த்துவர்.

மலர் வெளியீட்டுரையை இ.சங்கரும் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழகக் கல்வித்துறை விரிவுரையாளர் ம.சின்னத் தம்பியும் நிகழ்த்துவர்.

நூலின் முதற் பிரதியை மத்திய கிழக்கு நாடுகளின் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஏ.என்.மனுநீதி பெற்றுக்கொள்வார். (203)

# குடத்தனை வடக்கு, மணற்காடு க.கூ.சங்கங்களை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

வடமராட்சி, பெப்.20

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை வடக்கு, மணற்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை மீள இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் எம்.ஸ்ரீஸ்கந்தகுமார் கடற்றொழில் பரிசோதகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இப் பகுதியில் தற்போது பொற்பதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே இயங்கி வருகின்றது. இது பல நடவடிக்கைகளை தாமதப்படுத்துகின்றது எனப் பிரதேச கடற்றொழில் பரிசோதகர் உதவி அரச அதிபருக்குச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதையடுத்தே குடத்தனை வடக்கு, மணற்காடு ஆகிய இரு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு உதவி அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (202-160)

## நாளை

மாசி - 09 21.02.2008
வியாழக்கிழமை
திதி : பூரணை
முற்பகல் 09.37 வரை
நட்சத்திரம் : மகம்
முன்னிரவு 07.32 வரை
மாசி மகம்
[illegible] 08.01 - 09.31
ராகுகாலம் : 02.01 - 03.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி -12




## சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வரலாற்றில்....

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வீறுடன் மேற்கொண்ட இந்து சமய மறுமலர்ச்சியினால் சைவ சமயச் சூழலில் ஆங்கில பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டுமென்ற இயக்கம் யாழ்ப்பாணத்தில் உதயமானது. அதன் எதிரொலியாக சில தனவந்தர்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சைவ ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்தனர். இவ்வாறாக அமைக்கப்பட்ட முதலாவது சைவ ஆங்கிலப் பாடசாலை சுழிபுரத்தில் 1876ஆம் ஆண்டு கனகரத்தின முதலியாரால் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்ட இடம் இக்கல்லூரிக்கு அண்மையாக சமகால போராட்ட அனர்த்தங்களின் ஞாபகச் சின்னமாக தரை மட்டமாக தற்போது காட்சியளிக்கும், 1980ஆம் ஆண்டு முற்பகுதி வரை மாடி வீடாக கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளித்த, கனகரட்ண முதலியாரின் சொந்த வீட்டிலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

கனகரட்ண முதலியார் பட்டிக்கோட்ட செமினறியில் (வட்டுக்கோட்டையிலுள்ள இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரி) ஆங்கில கல்வி கற்ற முதற் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதும், ஆங்கிலக் கல்வி கற்க வேண்டியதன் நிமித்தம் கிறிஸ்தவப் பெயரையும் சூடிக்கொண்டவர் என்பதும், யாழ்ப்பாணம் கச்சேரியிலும் யாழ்ப்பாண நீதிமன்றத்திலும் முதலியாராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் ஏக காலத்தில் திறமையாக கடமையாற்றி பிரபல்யம் மிக்க நபர்களில் முதன்மை நிலையில் வாழ்ந்தவர் என்பதும் முக்கியமாகும். இதனாலன்றோ இக்காலத்தில் ஆறுமுக நாவலர் உட்பட பலர் உருவாக்கிய பல சைவ ஆங்கில பாடசாலைகள் செயல் இழந்து போனாலும் இப்பாடசாலை மட்டும் பல சவால்களுக்கும் எதிர் நீச்சல் போட்டு இன்றுவரை விக்ரோறியாக் கல்லூரியாக வளர்ச்சி அடைந்துள்ளது.

## முதலியார் கனகரத்தினம் [1876-1902]

இப்பாடசாலையின் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வு யாதெனில், இப்பாடசாலை 1892 ஆம் ஆண்டில் அரசாங்க உதவிபெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டதே. அன்றைய அரசாங்கத்துடன் முதலியார் கனகரத்தினம் அவர்களுக்கு இருந்த நெருங்கிய தொடர்பு காரணமாகவே பாடசாலைக்கு அரசாங்க உதவி பெறும் வாய்ப்புக் கிடைத்தது என்று கூறலாம். 1890ஆம் ஆண்டில், யாழ்.இந்துக்கல்லூரி ஸ்தாபிப்பதற்குப் பொறுப்பாக இருந்த சைவப் பெரியார்களின் உதவியுடன் முதலியார் அவர்கள், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இத்தகைய இந்துப் பாடசாலைகளை நிறுவும்படி சைவப் பெரியார்களை ஊக்குவித்தார். 1892ஆம் ஆண்டு மாசிமாதம் சைவபரிபாலனசபையின் வெளியீடான இந்துசாதனம் என்னும் பத்திரிகை மூலம் சுழிபுரம் இந்து ஆங்கில பாடசாலை அரசாங்க உதவி பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிவித்து அப்பகுதி வாழ் பெற்றோர்களுக்கு அவர்கள் பிள்ளைகளை கனகரத்தினம் முதலியாரினால் நடத்தப்படும் சுழிபுரம் இந்து ஆங்கில பாடசாலையில் கல்விபெற அனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அப்பொழுது யாழ்.இந்துக் கல்லூரி உட்பட வேறு எந்தப் பாடசாலையுமே அரசாங்கத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்று விக்ரோறியா கல்லூரி என்று விளங்கும் அன்றைய சுழிபுரம் இந்து ஆங்கில பாடசாலை, இலங்கைத் தீவிலே அரசாங்க உதவி பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்ட முதற் பாடசாலை என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டது.

அக்காலத்தில் ஓர் இந்து ஆங்கில பாடசாலை ஒன்றை நிர்வகித்து நடத்துவது மிக்க கஷ்டமாக இருந்தாலும், முதலியார் அவர்கள் பாடசாலையைத் திறமையாக நடத்தி வந்துள்ளார். யாழ்.இந்து சமயப் பெரியார்களின் உதவி மட்டுமன்றி அவர் கல்வி கற்ற அமெரிக்க மிஷனைச் சேர்ந்தவர்களின் உதவியும் கிடைத்த காரணத்தால் இம்முயற்சி வெற்றி கொடுத்தது. இவர் பெருமை பற்றிப் பாடசாலைச் சரித்திரமே கூறும். அப்பொழுது ஆற்றல் மிகு இந்திய அதிபர் ஒருவரின் நிர்வாகத்தில் பாடசாலை இயங்கி வந்துள்ளது. முதலியார் கனகரத்தினம் அவர்களுக்கு அவருடைய சகோதரர் துரையப்பா, புதல்வர்களான செல்லப்பா, இராசசுந்தரம், மருமகனான எம்.என்.சின்னப்பா ஆகியோர் உறுதுணையாக இருந்துள்ளனர்.

### அக்காலத்தில் முதன்மைப் பாடசாலையாக விளங்கியது

ஆரம்ப காலத்திலேயே இப்பாடசாலை விளையாட்டுத்துறை உட்பட பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் அடைந்தது. விளையாட்டு மைதானம் ஒன்று பெறப்பட்டு, மட்டைப்பந்தாட்டம் (CRICKET) அறிமுகப்படுத்தப்பட்டது. 1899ஆம் ஆண்டில் யாழ்.இந்துக்கல்லூரிக்கும் விக்டோரியா கல்லூரிக்குமிடையில் கிரிக்கெட் பந்தாட்டப் போட்டியொன்று விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றதாகவும் அதில் யாழ்.இந்துக் கல்லூரி வெற்றியீட்டியதாகவும், யாழ்.இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே இப்பாடசாலை விக்ரோறியா கல்லூரி என அழைக்கப்படலாயிற்று. ஆனால் இப்பெயர் ஏன், எப்பொழுது சூட்டப்பட்டது என்பது தெரியவரவில்லை. அக்காலத்தில் விக்ரோறியா மகாராணியின் பெயரையே பல ஸ்தாபனங்களுக்கு சூட்டிவந்தது ஒரு முறையாகும். 1900 ஆண்டின் பின் இரு தேசாதிபதிகள் இப்பாடசாலைக்கு விஜயம் செய்துள்ளனர். விக்ரோறியா கல்லூரி இந்நூற்றாண்டுப் பகுதியில் யாழ்ப்பாணத்திலேயே மிகப் பிரபல்யமான பாடசாலையாக விளங்கி வந்தது. பின் புதிய நூற்றாண்டுடன் யாழ். இந்துக் கல்லூரி முதன்மைப் பாடசாலையாக விளங்கத் தொடங்கியது. இருந்தாலும் பலகாலமாக இக்கல்லூரி யாழ்ப்பாணத்திலே முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றாகவே விளங்கி வருகின்றது.

இக்கல்லூரி சிறந்து விளங்கியமைக்கு 1898இல் இக்கல்லூரி வெளியிட்ட பாடசாலைச் சஞ்சிகை ஓர் ஆதாரமாக உள்ளது. அத்துடன் ஜோன் ப.மாட்டின் என்பவர் "யாழ்ப்பாணக் குறிப்புகள்" பற்றி எழுதிய புத்தகத்தில் பத்திரிகைத் தொழில் பற்றிக் குறிப்பிடும் போது, 1887இல் யாழ்ப்பாணக் கல்லூரி, 1898இல் விக்டோறியா கல்லூரி, 1900ல் யாழ்.மத்திய கல்லூரி ஆகியன வெளியிட்ட பாடசாலைச் சஞ்சிகைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கல்லூரியின் சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நிகழ்வு என்று கூறின், அது 1905 ஆவணி 24ஆம் நாள் இடம்பெற்ற பாடசாலைப் பரிசளிப்பு விழாவாகும். அப்பொழுதிருந்த நாட்டின் தேசாதிபதி சேர் ஹென்றி பிளேக் தம்பதியினர் தலைமை வகித்து, பங்குகொண்டு சிறப்பித்தமையால், கல்லூரிக்குப் பெருமை சேர்ந்தது.

அன்றைய விழாவில் தேசாதிபதி சேர் ஹென்றி பிளேக் அவர்களால் றிட்ஜ்வே ஹால் (RIDGEWAY HALL) என்ற புதிய மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. முதலியார் கனகரத்தினத்தின் புதல்வரான திரு.சி.எம். செல்லப்பாவின் முயற்சியினாலேயே இம் மண்டபம் உருவாகியது. திரு.செல்லப்பாவின் மைத்துனனான திரு.ம.நி. சின்னப்பா அவர்களே கட்டட ஒப்பந்தக்காரராக இருந்துள்ளார். இவரின் முயற்சியினால் யாழ்ப்பாண முற்றவெளியில் ஒரு மண்டபமும், இணுவில் வைத்தியசாலையும் உருவாகியது. வடபகுதி புகையிரத சேவை அமைப்பதில் தேசாதிபதி றிட்ஜ்வே உதவி செய்தமையால், அவரின் பெயரையே மண்டபத்திற்கும் வைத்துக் கொண்டனர்.

1911மாசி 15ஆம் நாள் வெளிவந்த இந்துசாதனம் என்னும் பத்திரிகையில் சோதிபதி மக்கலம் அவர்கள் திரு.ம.நி. சின்னப்பாவின் அழைப்பின் பேரில் மூளாய்க்கும் விக்ரோறியாக் கல்லூரிக்கும் விஜயம் செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. 1911ஆம் ஆண்டு மாபெரும் கண்காட்சியை விக்ரோறியாக் கல்லூரியிலும், மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசாமி தேவஸ்தானத்திலும் விமரிசையாக ஒழுங்கு செய்த மயில்வாகனம் நிற்சிங்க முதலியார், சின்னப்பா அவர்களின் அழைப்பின் பேரில் தேசாதிபதி மக்கலன் அவர்கள் சமுகம் கொடுத்து திறந்து வைத்தார். இரு இடங்களிலும் நடைபெற்ற இக் கண்காட்சியில் யாழ்ப்பாண கலை, ஓவிய, கைப்பணிப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. விக்ரோறியாக் கல்லூரி கண்காட்சியை மனேஜர் செல்லப்பா முதன்மையிலும், மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தான கண்காட்சியை சின்னப்பாவின் மருமகன் தம்பையா இராமசாமி முதன்மையிலும் தேசாதிபதி மக்கலம் ஆரம்பித்து வைத்தனர்.

## திரு.சி.எம்.செல்லப்பா [1902-1943]

1902இல் முதலியார் கனகரத்தினத்தின் புதல்வரான சி.எம்.செல்லப்பா அவர்
சாலையின் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். அவர் தன் நிர்வாகத் திறமையைக்
பாடசாலையைக் கட்டியெழுப்புவதற்கு, அரிய சேவை புரிந்துள்ளார். பாடசாலையை ச
ளிலும் வளர்ச்சியடையச் செய்த சிறந்த முகாமையாளராகத் திகழ்ந்தார். தூரத்திலிருந்
அதிபர்கள், ஆசிரியர்களுக்காக தங்குமிட வசதியாகத் தன் வீட்டிலேயே ஒரு விடுதியை
காலத்தில் நடத்தி வந்துள்ளார். 1943இல் அவர் இறக்கும்வரை 40 வருட காலமாகப் பாடச
நிர்வகித்து வந்துள்ளார். இவர் தன் வாழ்நாள் முழுவதையுமே பாடசாலையின் அபிவிரு
செலவு செய்தார் என்று கூறினால் மிகையில்லை. செல்லப்பாவின் பாடசாலை என்று கூறு
அவர் சேவை அமைந்தது. அவரே இப்பாடசாலையின் ஸ்தாபகர் என்று குறிப்பிட்ட வெளி
உண்டு. அவர் இப்பாடசாலைக்காற்றிய சேவைகள் இன்றும் பசுமை நினைவுகளாக நிற்கி

திரு.செல்லப்பா அவர்கள் காட்டிய நிர்வாகத்திறன் போற்றுதற்குரியது. திறமைமிக்
ரையோ, ஆசிரியர்களையோ, எழுதுவினைஞர்களையே, ஊழியர்களையோ தெரிவு செ
வல்லவர். தந்தையாரைப் போன்று இவரும் நாட்டில் ஒரு பிரபல்யமான பிரமுகராகவும், கல்
களுடன் தொடர்புகளும் கொண்டிருந்ததன் காரணமாக, பாடசாலைக்குத் திறமைமிக்க
குழுவைத் தெரிவதில் சிரமம் இருக்கவில்லை. பாடசாலையின் அதிபராக திரு WILLOU
SMALL அவர்களையும் இந்தியக் கல்விமானான திரு.நாராயணன் மேனன் அ
ஆசிரியராகவும், தெரிவு செய்து நியமித்தது. அவர் கொண்டிருந்த திறமையைக் காட்டு
திரு.மேனன் அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியில் ஆற்றிய சேவையின் பின் பெனா
கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். உள்ளூர் சிறந்த கல்விமான்களைத் தெரி
நியமித்தமையும் போற்றுதற்குரியதே. இவரினால் தெரிவு செய்யப்பட்ட திருவாளர்க
பரப்பிள்ளை, சோமசுந்தரம், சைவப்பெரியார், அவருடைய மைத்துனனாகிய அப்போது,
ஒரே ஒரு கலாநிதிப் பட்டம் பெற்றவருமாகிய Dr. சிவப்பிரகாசம் ஆகியோர் குறிப்பிடத்
ளாவர். ஆசிரியர் குழுவை நியமித்த பின் திரு.செல்லப்பா அவர்கள் பாடசாலையி
நிர்வாகத்தில் தலையிடுவது இல்லை. WILLOUGHBY SMALL சைவப் பெரியார் உட்பட
அதிபர்களும் பாடசாலையின் சிறந்த முன்னேற்றத்திற்குரிய தமது சிறந்த வழிகளைத் கை
தனர்.

## WILLOUGHBY SMALL

அயர்லாந்து பட்டதாரியான WILLOUGHBY SMALL 1910- 1922ஆம் ஆண்
திறமைமிக்க அதிபராகத் தனது நிர்வாகத்தை நடத்தி, திரு.செல்லப்பாவின் தெரிவு திறமை
என்பதை நிரூபித்துள்ளார். அவர் ஒரு சிறந்த கல்விமான். சிறந்த நிர்வாகியுமாவார். அவ
காலத்தில் அமெரிக்க மிசன் கிறிஸ்தவ பாடசாலைகளில், கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்பேட் பல்கல
பட்டதாரிகளே அதிபர்களாகக் கடமை புரிந்தனர். அத்தகைய அதிபருக்கு தான் எந்தவிதத்திலு
தவரல்ல என்பதைத் தனது நிர்வாகத்தின் மூலம் எடுத்துக் காட்டியவரே WILLOUGHBY S

பிரபல்யமான இந்து ஆங்கில பாடசாலையின் அதிபராக இருந்த இவர், யாழ்.இந்துக்
மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களோடு இணைந்து இம் மூன்று பாடசா
பொது நிகழ்வுகளை நடத்த முயற்சி எடுத்தார். இவற்றில் ஒன்று பொதுப் பரீட்சையாகும்.

மாணவர்களுக்கு இவர் அளித்த கல்வி ஊக்குவிப்புத் திறனால், இவருக்குப் புகழ் மேலும்
மாணவர்கள் இவரிடம் பெற்ற சான்றிதழ்கள் மூலம், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநா
வேலை வாய்ப்புகளைத் தேடிக்கொண்டனர். இதனால் மாணவர் சமுதாயம் விக்ரோறியாக் கல்
நாடிச் செல்லத் தொடங்கியது. இவரின் சான்றிதழ்கள் பெறுவதே அவர்களின் முக்கிய நே
இருந்தது.

இவர் தனது தாய் நாடான அயர்லாந்துக்குத் திரும்பவில்லை. தனது இறுதிக்காலம் வ
புரத்திலேயே தங்கியிருந்தார்.

## சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார்

திரு.நரசிங்கநாயுடு அவர்கள் இரண்டு வருடகாலம் திறமைமிக்க அதிபராக கல்லூரியை நிர்வகித்தார். அவரைத் தொடர்ந்து சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். அவரின் காலப்பகுதியும் மீண்டும் ஓர் ஒளிமயமான காலப்பகுதியாக விளங்கியது. இவர் சிறந்த கல்விமான், தத்துவஞானி, சமூக சீர்திருத்தவாதி, அத்துடன் பல நூல்களின் நூலாசிரியருமாவார். இவர் அதிபராகக் கடமையாற்றிய மூன்று பாடசாலைகளிலும் இவரின் கல்வித்திறன் மேம்பட்டு விளங்கினாலும், விக்ரோறியாக் கல்லூரியிலேயே சேவையின் திறன் காட்டப்பட்டு, பாராட்டுக்குரியவரானார்.

பாடவிதானத்தில் அமைந்த எப்பாடத்தையும், திறமையாகக் கற்பிக்கும் ஆற்றல் பெற்ற பெரியார். லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட பயிற்சி கொடுத்து, சிறப்புச்சித்தியடையச் செய்தார். மனோதத்துவ ரீதியாகவும் பாடசாலையில் குறைவான தரத்திலிருந்த மாணவர்களை அணுகி அவர்களின்கல்வி முன்னேற்றத்திலும் வெற்றிகண்டார். ஏனைய பாடசாலைகளிலிருந்தும் இத்தகைய மாணவர்கள் இவரின் நேரடிக் கண்காணிப்பில் கல்வி கற்பதற்காக விக்ரோறியாக் கல்லூரியில் சேர்ந்தனர். யாழ்.இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த திரு.சபாரத்தினம், இலங்கை வங்கியின் முகாமையாளராகவும், பின் உலகவங்கியில் உயர்ஸ்தானம் வகித்தவருமாகிய திரு.லோகநாதன் ஆகிய இருவரும் தமது கனிஷ்ட பாடசாலைப் பரீட்சைகளில் சித்தியடையவில்லை. இறுதியில் , விக்ரோறியாக் கல்லூரியில் சேர்ந்து, சைவப் பெரியாரின் மாணவர்களாகிப் பரீட்சையில் சித்திபெறும் வாய்ப்பினைப் பெற்றனர். பின் அவர்கள் தம் வாழ்க்கையிலும் சிறந்த உயர் பதவிகளைப் பெறக் கூடியதாக இருந்தது. இவ்விதம் சைவப் பெரியாரின் பெருமையை நன்றியுடன் நினைவு கூர்ந்து கூறியவர் வேறு யாருமல்ல திரு.என்.சபாரத்தினம் அவர்களேதான். 1985 ஆம் ஆண்டில் இக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட இவர் தான் ஆற்றிய உரையில் இவ்விதம் கூறியிருந்தார்.

சைவப் பெரியாரின் மாணவர்கள், தமது குருவின் சேவையை மறவாது, "சிஷ்யபரம்பரை" என்பதை உருவாக்கி, தமது கல்வி நிறுவனத்தில் வருடாவருடம் தவறாது இடம்பெற்று வரும் அவர் குருபூசையில் கலந்து கொண்டு அன்னாரை வணங்கி அஞ்சலி செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

சைவப் பெரியாரின் நிர்வாகத்தைத் தொடர்ந்து அவருடைய மைத்துனனாகிய
கலாநிதி சிவப்பிரகாசம் அவர்கள் இரண்டு வருடகாலம் அதிபராகக் கடமையாற்றினார். இவ
தத்துவ (உளவியல்) துறையில் கலாநிதிப்பட்டம் வாங்கிய முதல் கல்விமான் ஆவார். இவ
வாளர்கள் முத்துக்குமாரு, நவரத்தினராசா, சிவராசா ஆகியோர் அதிபர்களாகக் கடமை புரிந்

## திரு.இராமசாமி தம்பையா [1943-

1943ஆம் ஆண்டில் திரு.செல்லப்பாவின் மறைவின் பின் முகாமையாளராக மூளாயைச்
திபர் திரு.இராமசாமி தம்பயையா விளங்கினார். சுழிபுரம் உப தபால் கந்தோர் கல்லூரியின் ஒரு
யது. தனியார் ஒருவர் இப்பெரிய பாடசாலையை நிர்வகிப்பதில் 1945ஆம் ஆண்டில் சிரம
ணம் 1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதல் அன்றைய கல்வி மந்திரி திருC.W.W. கன்னங்கர
தப்பட்ட இலவச கல்வித்திட்டம் அமுலுக்கு வந்தது. அதனால் மாணவர்களிடம் இருந்து பெ
லைக் கட்டணம் நிறுத்தப்பட்டது. 01.08.1946இல் இக்கல்லூரி அரசாங்கத்தினால் பொறுப்
அரசினர் விக்ரோறியாக் கல்லூரி என்ற நாமத்துடன் வளர்ச்சி கண்டு 125ஆம் ஆண்டில் வெ
துள்ளது. ஏனைய அரசாங்க உதவி பெறும் பாடசாலைகள் 1961ஆம் ஆண்டு அரசாங்கத்தினா
என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்ற பின் அன்றைய வட்
மன்ற உறுப்பினரும் கல்விக்குப் பொறுப்பான நாடாளுமன்ற காரியதரிசியுமான திரு.க.கன
பாடசாலை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ரூபா ஐந்து இலட்சத்தில் பாரிய இரண்டு மாடிக்க
களும், நீர்வழங்கல் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன.

இனி அக்காலப்பகுதியில் மாணவர்களின் நிலையை ஆராய்வோம். மாணவர்களுக்கு சீ
என்பது கிடையாது. வேட்டியுடனும் மாணவர்கள் பாடசாலைக்கு வருவார்கள். காலணி (SHO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி - 125ஆம் ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டுச் சிறப்பு மலர்

2 - 1943)

ம்.செல்லப்பா அவர்கள் பாட
வாகத் திறமையைக் கொண்டு
ார். பாடசாலையை சகல துறை
ழ்ந்தார். தூரத்திலிருந்து வரும்
லேயே ஒரு விடுதியை ஆரம்ப
ருட காலமாகப் பாடசாலையை
சாலையின் அபிவிருத்திக்காக
ாடசாலை என்று கூறுமளவிற்கு
று குறிப்பிட்ட வெளியீடுகளும்
 நினைவுகளாக நிற்கின்றன.
ற்குரியது. திறமைமிக்க அதிப
களையோ தெரிவு செய்வதில்
ன பிரமுகராகவும், கல்வி மான்
லக்குத் திறமைமிக்க ஆசிரியர்
பராக திரு WILLOUGHBY
யணன் மேனன் அவர்களை
 திறமையைக் காட்டுகின்றது.
வையின் பின் பெனாரிஸ் பல்
ல்விமான்களைத் தெரிவு செய்து
யப்பட்ட திருவாளர்கள் சிதம்
னனாகிய அப்போது, நாட்டின்
ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்க
வர்கள் பாடசாலையின் உள்
சைவப் பெரியார் உட்பட ஏனைய
றந்த வழிகளைத் கடைப் பிடித்

## MALL

10- 1922ஆம் ஆண்டுவரை
பாவின் தெரிவு திறமையானது
நிர்வாகியுமாவார். அவருடைய
ஜ், ஒக்ஸ்பேட் பல்கலைக்கழக
 தான் எந்தவிதத்திலும் சளைத்
 WILLOUGHBY SMALL.
 இவர், யாழ்.இந்துக் கல்லூரி,
 இம் மூன்று பாடசாலைக்குரிய
துப் பரீட்சையாகும்.
ருக்குப் புகழ் மேலும் சேர்ந்தது.
பூர் போன்ற வெளிநாடுகளில்
யம் விக்ரோறியாக் கல்லூரியை
வர்களின் முக்கிய நோக்கமாக

னது இறுதிக்காலம் வரை சுழி

## ...னரர்

அதிபராக
பாதசுந்தர
ப்பகுதியும்
ல்விமான்,
சிரியருமா
வரின் கல்
ய சேவை

கும் ஆற்
றும் மாண
.மனோதத்
ள அனுகி
சாலைகளி
ல்வி கற்ப
ின் அதிப
கவும், பின்
ஆகிய இரு
ல. இறுதி
வர்களாகிப்
தம் வாழ்க்
தம் சைவப்
வறு யாரு
இக்கல்லூரி
இவர் தான்

ாது, "சிஷ்
ருடம் தவ
ன்னாரை

னனாகிய
டமையாற்றினார். இவர் இந்நாட்டில் மனோ
ல்விமான் ஆவார். இவரைத் தொடர்ந்து திரு
ர்களாகக் கடமை புரிந்துள்ளனர்.

## ...(1943-1946)

யாளராக நூனாயைச் சேர்ந்த சுழிபுரம் தபால
தார் கல்லூரியின் ஒரு பகுதியிலேயே இயங்கி
5ஆம் ஆண்டில் சிரமங்கள் தோன்றின. கார
ரு C.W.W. கன்னங்கராவால் அறிமுகப்படுத்
ர்களிடம் இருந்து பெறப்பட்டு வந்த பாடசா
ாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு சுழிபுரம்
25ஆம் ஆண்டில் வெற்றிகரமாக காலடி பதித்
ண்டு அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டன
 பின் அன்றைய வட்டுக்கோட்டை நாடாளு
ரிசியுமான திரு.க.கனகரட்ணம் அவர்களால்
ாரிய இரண்டு மாடிக்கட்டிடமும் ஆய்வு கூடங்

. மாணவர்களுக்கு சீருடை (UNIFORM)
ார்கள். காலணி (SHOES OR SANDALS)

என்ற பேச்சுக்கே இடமில்லை. பல மைல் தூரத்தில் இருந்து வந்தவர்களும் கால்நடைதான். புத்தகங்களுக்கு பை (SCHOOL BAG) இருக்கவில்லை. புத்தகங்களை ஒரு பட்டியால் (BELT) கட்டித் தோளில் சுமந்தே பாடசாலை செல்வார்கள். ஊற்றுப் பேனாக்கள் மிகச் சிலரிடமே இருந்தன. BALL POINT பேனாக்கள் அப்பொழுது அறிமுகமாகவில்லை. ரியூசன் (TUITION) என்றோ கல்வி நிறுவனங்கள் என்று ஒன்றும் இருக்கவில்லை. மாணவர்கள் பாடசாலைப் போதனையிலேயே பூரணமாகத் தங்கியிருந்தார்கள்.

இக்காலப்பகுதியில் கற்ற இரு மாணவர்களைப் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்த ஒரேயொரு தமிழரான திரு.அ.அமிர்தலிங்கம். இவரே இக்கால்லூரியின் முதலாவது பட்டதாரி என்ற பெருமையைத் தட்டிக் கொண்டவர். மற்றையவர் இலங்கை நாடாளுமன்றத்தில் மந்திரிப்பதவி வகித்த திரு.செ.குமாரசூரியர்.



கனகரத்தினம் செல்லப்பாவின் உருவச் சிலை திறந்துவைக்கப்பட்ட நிகழ்வு

## திரு.எஸ்.சுப்பிரமணியம்

சுதுமலையைச் சேர்ந்த திரு.எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் 01.08.1949லிருந்து 31.12.1960 வரை அதிபராகக் கடமையாற்றி யுள்ளார். இது மறுபடியும் கல்லூரியின் ஒளிமயமான காலம் என்றே சொல்லலாம். 1951இல் மத்திய மகா வித்தியாலய கட்டட அமைப்புக்கமைய வகுப்பறைகளும் 04 ஆய்வுகூடங்களும் சேர்ந்து அமைந்ததாக புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. அப்பொழுது வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினராகவும், உதவிக் கல்விமந்திரியாகவும் இருந்த திரு.கனகரத்தினம் அவர்களின் உதவியுடன் கல்லூரியில் பல கட்டடங்கள் எழுந்தன. 1955இல் GURUGE BLOCK என்ற புதிய மண்டபம் அமைக்கப்பட்டது. பாடசாலையின் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டது. அத்துடன் எல்லைச் சுவர்களின் ஒரு பகுதியும் கட்டப்பட்டன. பாடசாலையின் ஆசிரியர் குழுவில் அப்பொழுது சேவையில் இருந்த திரு.இராசசுந்தரம் அவர்களின் அயராத ஊக்கத்தினால் கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சி அடைந்தது. கல்லூரி கால்பந்தாட்டக் குழு பல போட்டிகளில் பங்கெடுத்து வெற்றியீட்டி கல்லூரிக்கு புகழ் தேடிக்கொடுத்தது. திரு.சுப்பிரமணியமும் அவரைத் தொடர்ந்து வந்த அதிபர்கள் சிலரும் வேறு அரசாங்கப் பாடசாலைகளில் முன்பே அனுபவமிக்க, நிர்வாகத்திறமை பெற்ற அதிபர்களாகக் கடமை புரிந்துள்ளனர்.

## திரு.வி.தம்பு

திரு.ஏ.ரி.சபாரத்தினம் 01.06.1961இலிருந்து 31.12.1962 வரை அதிபராக சேவையில் இருந்தார். பின் 01.01.1963இலிருந்து 17.10.1968 வரை திரு.வி.தம்பு அவர்கள் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவருடைய சேவைக் காலத்தில் விக்டோறியாக் கல்லூரி மேலும் பிரபல்யமடைந்து. திரு.தம்பு அவர்களின் முயற்சியினால் கல்லூரியில் உயர்தர வகுப்பு ஒன்றியம் அமைக்கப்பட்டது. அவருடைய சேவைக் காலத்திலேயே அங்கு மனையியல் கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இவற்றிலும் மேலாக இவரின் சேவையின் சிறப்பாகவும், அவரின் நீங்காத நினைவாகவும் திகழ்வது, பிரதான மண்டபத்தில் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட அழகான சிவகாமசுந்தரி சமேதரரான நடராசா சிற்பமே. திரு.தம்பு அவர்களின் சேவையைத் தொடர்ந்து திரு.வி.கே.தியாகராஜபிள்ளை அதிபராகக் கடமைபுரிந்தார். அவரைத் தொடர்ந்து 15.11.1968 இலிருந்து 03.01.1972 வரை அளவெட்டியைச் சேர்ந்த திரு.சிவசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுப்போற்றிருந்தார். இக் கல்லூரி நிர்வாகத்தை ஏற்பதற்கு முன், இவர் அளவெட்ட அருணோதயா கல்லூரியில அதிபராகவிருந்து அதனைக் கட்டியெழுப்பிய சிற்பியென பெருமைப்படுத்தப்பட்டவர். இவரைத் தொடர்ந்து சிறந்த ஆசிரியராகக் கருதப்பட்ட திரு. என்.சிவஞானம் அவர்கள் 04.01.1972இலிருந்து 30.06.1974 வரை அதிபர் பதவியை ஏற்று சேவை புரிந்து உள்ளார்.

## திரு.வி.இராசசுந்தரம்

இப்பாடசாலையின் திறமைமிக்க பழைய மாணவரும் அப்பொழுது ஆசிரியர் குழுவில் இருந்து பாட சாலைக்கு அரிய சேவை புரிந்து வந்தவருமாகிய திரு.வி.இராசசுந்தரம் அவர்கள் 01.07.1974இல் அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவருடைய சேவைக்காலத்தில் பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்பாக 1976இல் இடம்பெற்றது. நீண்ட காலமாக இவர் கல்லூரியுடன் கொண்டிருந்த தொடர்பும், கல்லூரியின் பால் அவர் கொண்டிருந்த அபிமானமும், கல்விமான்களுடன் கொண்டிருந்த தொடர்பும், அரசியல்வாதிகளுடன் இருந்த செல்வாக்கும் சேர்ந்து இருந்தமையால் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பாக அமைந்தது. இவ்விழாவுடன் ஒட்டி இவர் ஒழுங்கு செய்த பொருட்காட்சியும் களியாட்டு விழாவும் கல்லூரி மைதானத்தில் ஒரு மாதகாலம் வரை இடம்பெற்றது. இது மக்களைக் கவர்ந்திருந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

ஜேர்மனியிலிருந்து வருகை தந்திருந்த கால்பந்தாட்டக்குழு ஒன்றுடன் கல்லூரிக் கால்பந்தாட்டக் குழுவினர் பங்கு கொண்ட போட்டிகளும், ஒரு மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் இவர் நடத்திய மக்களைக் கவர்ந்த நிகழ்ச்சிகளாகும். ஹாட்லிக் கல் லூரி பழைய மாணவனும் அங்கேயே சிறந்த ஆசிரியருமாகக் கடமை புரிந்த திரு.ஏ.எம்.ஸ்பென்சர் அவர்கள் இராசசுந்தரத்திற்கு உதவி அதிபராகவிருந்து கடமையாற்றியுள்ளார்.

திரு.இராசசுந்தரம் 15.05.1977இலிருந்து இளைப்பாறினார். இவருடைய நிரிவாகம் முடிவடைய திரு.அருணாசலம் அவர்கள் 13.05.1978இல் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்ட காலத்து இடைக்கால ஒருவருடப் பகுதியில் திருவாளர்கள் ஸ்பென்சர், சங்கரப்பிள்ளை ஆகிய இருவரும் கடமை புரிந்துள்ளனர்.

> **விக்ரோரியாக் கல்லூரி,**
> **சுழிபுரம்**
> **125ஆவது ஆண்டு நிறைவு விழா**
> **மலர் வெளியீடு**
>
> காலம்: 2008.02.20புதன்கிழமை
> நேரம்: பிற்பகல் 2 மணி
> இடம்: கல்லூரி மண்டபம்
> தலைவர்: திருமதி அ.வேலுப்பிள்ளை
> கல்லூரி அதிபர்
> பிரதம விருந்தினர் : திரு.த.விக்னராஜா
> யாழ். மாவட்ட நீதிபதி
> வாழ்த்துரை : திரு.ப.விக்னேஸ்வரன்
> கல்விப் பணிப்பாளர்
> முதற்பிரதி பெறுநர்: திரு A.N. மனுநீதி
> Deputy General Manager,
> Roads & Constructions
> Muscat, Oman -
> தலைவர்,
> கல்லூரிப் பழைய மாணவர்சங்கம்,
> மத்திய கிழக்கு நாடுகள்.
>
> விக்ரோறியாக் கல்லூரி,
> சுழிபுரம்,
> **நூற்றாண்டு விழாக்குழு.**

## திரு.கே.அருணாசலம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு.கே.அருணாசலம் அதிபராக 13.05.1978இருந்து 28.08.1987 வரை சேவை புரிந்துள்ளார். கல்லூரியின் சரித்திரத்தில் இவருடைய காலம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கல்லூரி கட்டட அபிவிருத்தி கல்லூரியின் தென் பகுதிவரை கற்சுவரை விஸ்தரித்தமை மற்றும் கல்லூரிக்கு ஏற்பட்டிருந்த பல்வேறு பிரச்சினைகளை தீர்தமை இவருடைய திறமையினால் நிறைவேற்றப்பட்ட சில விடயங்களாகும். கல்லூரி அபிவிருத்தி சபையின் பண நெருக்கடி விடயங்களை ஆராய்ந்து தீர்த்தமையால் கல்லூரிக்கு மேலும் இரண்டு பரப்பு நிலத்தை வடக்குப் புறமாக சேர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

கல்லூரி விளையாட்டுத்துறை உட்பட சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. இக்காலத்துக்கு முன்பிருந்த காலப் பகுதியில் கால்பந்தாட்டப் போட்டிகளில் பல வெற்றிகளைப் பெற்றிருந்தாலும் வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொள்ள முடியவில்லை. 1981 இல் முதல் தடவையாக 15 வயதுக்குக் கீழ்ப் பிரிவினரின் போட்டிகளில் கலந்துகொண்டு 18 போட்டிகளில் வெற்றிபெற்று மாவட்ட வெற்றிக் கிண்ணத்தை இக்கல்லூரி பெற்றுக் கொண்டது. 17 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட போட்டி பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாகும். கொழும்பிலிருந்து வந்த இரு சிரேஷ்ட பிரதம கல்வி அதிகாரிகள், யாழ்ப்பாண பிரதம கல்வி அதிகாரி, மற்றும் கொழும்பு, யாழ்ப்பாண விளையாட்டுத்துறை அதிகாரிகள் சமுகமளித்திருக்க நெல்லியடி மத்திய மகா வித்தியாலய குழுவிற்கும் விக்ரோறியாக் கல்லூரி குழுவிற்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் இக்கல்லூரி குழு வெற்றியீட்டி, வெற்றிக் கிண்ணத்தை தட்டிக்கொண்டது. 1985இல் போட்டிகளெதுவும் இருக்கவில்லை. ஆனால் தொடர்ந்து வந்த காலங்களில் ஒரு குழுவாகு தல் வெற்றியீட்டி வந்து குறிப்பிடத் தக்கது.

வட்டாரம், மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகளிலும் விக்ரோறியாக் கல்லூரி திறமையாகச் செய்து, முன்னிலையில் நின்றது. 1982ஆம் ஆண்டில் இக்கல்லூரியில் யாழ்.மாவட்ட சாரணர் பாசறை இடம்பெற்றபோது யாழ். மாவட்ட சாரணர்கள் பங்குகொண்டனர். முதல் தடவையாக ஜனாதிபதி சாரணர் நியமிக்கப்பட்டார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின் பரிசளிப்பு விழாக்கள் தொடர்ந்து இடம்பெற்றன. ஸ்தாபகர் நினைவு உரைகள் சேர்க்கப்பட்டன. சைவப் பெரியாரின் நூற்றாண்டு நினைவு விழா 1978 இல் இடம் பெற்றது. அத்துடன் வருடாவருடம் மெய்வல்லுனர் போட்டிகள் உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்று கூடல் விருந்துபசாரங்களும் இடம்பெற்றன.

சுருக்கெழுத்து, தோல் பொருள்கள் செய்தல் போன்ற தொழிற்கல்வியும் இங்கு புகுத்தப்பட்டது. திரு. அருணாசலம் அவர்கள் இளைப்பாறும் காலத்தில் நாட்டின் கல்வியுலகில் சிறந்தகல்விமானாகவே கருதப்பட்டார். அன்று கல்வித் துறையிலிருந்த பிரதம கல்வியதிகாரிக்கு அடுத்ததாக இரண்டாவது நிலையில் வைத்துக் கருதப்படத்தக்க கல்விமானாகவும் அன்றிருந்த தமிழ் அதிபர்கள் மத்தியிலும் சிறந்தவராகவும் கணிக்கப்படத்தக்கவர் என்று 1987இல் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. மன்சூர் குறிப்பிட் டுள்ளார்.

திரு. அருணாசலம் அவர்களைத் தொடர்ந்து V.M. விஜயரத்தினம் அவர்கள் பதில் அதிபராகக் கடமையாற்றினார். அதன்பின் பதவிக்கு வந்த திரு.K.K.நடராசா அவர்கள் 04-07-1989வரை அதிபராகக் கடமையிலிருந்தார். இவரும் அனுபவமிக்க அதிபரானமையால் பாடசாலையின் அபிவிருத்தியில் கவனம் செலுத் தினார். கல்லூரிப் பரீட்சை பெறுபேறுகளும் இவர் காலத்தில் திருப்தியாகவே இருந்தது. இவர் இளைப்பாறிய பின் திரு. செல்வரத்தினம் பதில் அதிபராக ஒரு மாதகாலம் பணிபுரிந்தார். அவரைத் தொடர்ந்து கல்லூரியின் ஆசிரியர் குழுவிலிருந்த சிறந்த ஆசிரியரான திரு S.பத்மநாதன் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். கல்லூரியில் நீண்ட நாள் தொடர்பின் காரணத்தால், கல்லூரிப் பாரம்பரியங்களை நன்கு அறிந்திருந் தமையால், அக்காலக் கஷ்ட நிலையிலும், கல்லூரி நிர்வாகத்தைத் திறம்பட நடத்திச் சென்றார்.

## திரு. K. சந்திரபாலன்

திரு.S. பத்மநாதனைத் தொடர்து, திரு.K.சந்திரபாலன் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். அக்கால அரசியல்சூழ்நிலைக் கஷ்டத்தின் மத்தியிலும், கல்லூரியின் தரம் குறையாது கட்டிக்காத்த பெருமையைத் தேடிக் கொண்டார். மாணவர்கள் தொடர்ந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றுவந்தனர்.

அன்றிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக, இக்கல்லூரி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பகுதிநேர பாடசாலையாக இயங்கி வந்தது. பின் 13.05.1996 இல் திரும்பவும் சுழிபுரத்தில் கல்லூரியில் இயங்கத் தொடங்கியது.

இக்கல்லூரியில் 1995இல் 1368 மாணவர்களும், 52 ஆசிரியர்களும் இருந்தனர். பின்னர் இப் பாடசாலையில் 770 மாணவர்களும், 31 ஆசிரியர்களும் இருந்தனர். திரு. சந்திரபாலன் கல்லூரி மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுத்தார். வழமைபோல் மெய்வல்லுனர் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் மற்றும் சில நிகழ்ச்சிகளையும் நடத்தினார்.

இவர் மீண்டும் கல்லூரியின் தரத்தையும், புகழையும் மீட்டெடுக்க அரும்பாடுபட்டார். இவ்வரிய அவர் தொண்டிற்கு சுழிபுரம், கொழும்பு, இலண்டன், கனடா, பிரான்ஸ் ஆகிய இடங்களிலுள்ள பழைய மாணவர் சங்கங்கள் தம் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்துள்ளனர்.

## திருமதி A. வேலுப்பிள்ளை

இப்பொழுது அதிபராக உள்ள திருமதி A. வேலுப்பிள்ளை முன்னைய அதிபரின் நற்பணிகளைத் தொடர்ந்து புரிந்து வருகிறார். அவர் ஓர் அனுபவம் மிக்க சிறந்த செயல் வீரமணியாவார். கஷ்டமான இக்காலத்திலும் கல்லூரியின் நற்பெயரைக் குறைய விடாது உயர்வாக வைத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து வருபவர்கள் அனைவரும் அவரை வாழ்த்துகின்றனர். அவரும் மாணவர்களை இயன்றவரை பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவதில் அக்கறை எடுத்து வருகிறார்.

விக்ரோறியாக் கல்லூரி தனது 125ஆவது வருடத்தைக் கொண்டாடும் போது அதிபராக இருத்தல் அவருடைய அதிர்ஷ்டமாகும். அக்கொண்டாட்டத்தைத் திறம்படநடத்தும் பொருட்டு அவர் சுழிபுரம், கொழும்பு, லண்டன், பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களில் உள்ள பழைய மாணவர்கள் சங்கக் கிளைகளின் ஆதரவைப் பெற்றுள்ளார்.

அனுசரணை:
மருத்துவப் பேராசிரியர்
மயில்வாகனன் சிவசூரிய
(நிறுவுநர் கனகரத்தின முதலியாரின் பூட்டனும்
முகாமையாளர் சி.எம்.செல்லப்பாவின் பேரனும்
முகாமையாளர் இ.தம்பையாவின் உடன் பிறாவச்
சகோதரனும் - யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தரும்)
(சி/551630)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியில் கடந்த பன்னிரண்டு
ஆண்டுகளாக அலுவலகப் பணியாளராக
நற்பணியாற்றி 20.02.2008இல்
மணிவிழாக் காணும், இளைப்பாறும்

**திரு.கனகசபை இரத்தினசிங்கம்**

அவர்களை ஓய்வுக்காலத்தில் சகல வளங்களுடனும்
நீடூழி காலம் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
யா/அராலி இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
(71249)



## கண்ணீர் அஞ்சலி



எமது சம்மேளனத்தின் செயலாளர்

**கந்தையா சிவதாசன்** (சிவா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய சம்மேளனம், நீர்வேலி தெற்கு. (71258)
நிர்வாகசபை உறுப்பினர்களும் அங்கத்தவர்களும்.


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவதாசன் (சிவா)



**(தலைவர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய் - செயலாளர், விவசாய சம்மேளனம், நீர்வேலி தெற்கு)**

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவதாசன் 18.02.2008 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கார்திகேசு மற்றும் வர்தலட்சுமி தம்பதியரின் மருமகனும் பிரேமலோஜினியின் அன்புக் கணவரும் கணலோஜன் (ஜேர்மனி), அமிருனா, ஹரிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குமரகுருபரன் (இந்தியா), நடனபாதம் (நவிண்டில்), கனகாம்பிகை (ஜேர்மனி), வரதராசான் (கனடா), சிவாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதர்மடத்தடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (71257)

தகவல்:
**க.நடனபாதம் (சகோதரன்),**
**சி.பிரேமலோஜினி (மனைவி).**

## சுவாமிநாதர் நடராஜா

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**



மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் நடராஜா அவர்கள் நேற்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதர் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரகதவல்லியின் அன்புக் கணவரும் மயில்வாகனத்தின் சகோதரரும் பத்மாவதியின் மைத்துனரும் கதிர்காமநாதன் (சுவிஸ்), சுசீலாதேவி, காமினிதேவி (ஆசிரியை, சுப்பிரமணிய வித்தியாலயம், மாரீசன்கூடல்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோகிலாம்பாள், றாதாம்பாள் ஆகியோரின் சிறிய தந்தையும் ரவீந்திரா (D.R.C., யாழ்ப்பாணம்), சிவபாக்கியம் (சுவிஸ்), விக்னேஸ்வரன் (V.G. எலக்ரிக்கல், இணுவில்) ஆகியோரின் மாமனாரும் சத்தியா, சத்தியறாம், றாகவன் (கனடா), கோமதி, துரந்தரன் காலஞ்சென்ற சுவந்திரன் மற்றும் தபேந்திரன், லவக்குமார், லலிசாம்பவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (20.02.2008) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாரீசன்கூடல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரீசன் கூடல்,
இளவாலை.
T.P.: 077 9005858

தகவல்:
**சகோதரர், மக்கள், மருமக்கள்.**

## அன்னபூரணம் வயித்திலிங்கம் (பவளம்)



அச்செழுவைப் பிறப்பிடமாக்வும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் வயித்திலிங்கம் 18.02.2008 அன்று இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - ஆச்சிக்குட்டி தம்பதியரின் மகளும் வயித்திலிங்கத்தின் அன்பு மனைவியும் அருட்செல்வம், கலைச்செல்வி, ஜனனி, திருச்செல்வி, திருச்செல்வம், றவீந்திரராசா (இத்தாலி), சிவானந்தராசா ஆகியோரின் அன்புத் தாயும் கலாறஞ்சன் (இத்தாலி), கலாமோகன் (கனடா), தேவகாந்தன், சிவகணேஸ்வரி, நந்தா, ஜெயா ஆகியோரின் மாமியும் டனுஜன், வர்ஷாயினி, சதுர்சினி, வதனி, சங்கவி, திபிராஜ், சர்மினி, மயூரன், சர்மிளா, சாருஜன், பிரணவி, புவியா, சத்தமி ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான மகான், இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழுவிலுள்ள இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு,
நீர்வேலி. (71257)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# 2007 இற்கான தமிழ்த்தினப் போட்டி: நாட்டுக்கூத்து முடிவுகள் வருமாறு

யாழ்ப்பாணம், பெப்.19

கடந்த ஆண்டுக்குரிய தமிழ்மொழித்தின மாவட்ட மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்களை மாவட்ட மட்ட தமிழ்மொழித் தினக்குழு அறிவித்துள்ளது.

இப்போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிக ளில் கலந்து கொள்ள முடியும். மாகாண மட்டப் போட்டிகள் யாவற்றையும் இந்த மாத இறுதிக்குள் வவுனியாவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாகாணமட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ள மாணவர்களை, வவுனியாவுக்குச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு தயார் நிலையில் இருக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இவற்றில் நாட்டுக்கூத்துப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு;

**தென்மோடிக் கூத்து**

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி. - யாழ்ப்பாணம், யா/புனித அந்தோனியார் கல்லூரி - தீவகம், யா/இளவாலை மெய்கண்டான் ம.வி. - வலிகாமம்

**வடமோடிக் கூத்து**

யா/கைதடி நாவற்குழி அ.த.க.பா.- தென்மராட்சி, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி - வலிகாமம்.

**விசேட கூத்து**

யா/விக்டோரியாக் கல்லூரி - வலிகாமம், யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வி - தீவகம், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. - தென்மராட்சி.

**சிந்துநடைக்கூத்து**

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - வலிகாமம், யா/வட இந்து மகளிர் கல்லூரி - வடமராட்சி, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - யாழ்ப்பாணம்.

**இசை நாடகம்**

யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை - வலிகாமம், யா/இந்து மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட. - வடமராட்சி.

# தகவல் விஞ்ஞான டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப்.20

இலங்கை நூலக சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமாக் கற்கை நெறிக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன.

DIPLIS LEVEL 2 PART I பரீட்சைகள் அடுத்த மாதம் 8ஆம், 9ஆம், 15ஆம் திகதிகளிலும் DIPLIS LEVEL I (மீள்பரீட்சை) அடுத்த மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்காதவர்கள் யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகரிடம் அதனைப் பெற்று எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.20

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் 90 ஆவது பொதுக் கூட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அருணோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

செ. வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்குப் பிரதம விருநந்தினராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு கலந்து கொள்வார். (202)

# உணவு பதனிடல் பயிற்சி

நல்லூர், பெப்.20

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு மகளிர் நல அபிவிருத்தி மன்ற உறுப்பினர்களுக்கான உணவுபதனிடல் பயிற்சி எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக் கிழமை தொடக்கம் 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

கோப்பாய் விதாதா வள நிலையத்தில் அன்றைய தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். பயிற்சி நெறிகளை கோப்பாய் பிரதே செயலர் சி.ஏ. மோகன்றாஸ் ஆரம்பித்து வைப்பார். ஜேர்மன்தொழில் நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் இப் பயிற்சி நெறி இடம் பெறவுள்ளது.

(202-111)


## உடனடியாக அவசர தேவை

**4,000 மாங்கொட்டையுடன் கூடிய மாங்கன்றுகள் அல்லது 5,000 (விதை) முளைக்கக் கூடிய மா விதைகள் உடனடியாகத் தேவை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு: **க.குகனேசன்,**
மங்களா பவனம், றெயில்வே லேன்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(71269)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
**செல்வி இராமலிங்கம் நிறைமதி**
அவர்களின் அன்புச் சகோதரன்

**அமரர்**

**இராமலிங்கம் என்நிதி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் குழாம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**
(71268)


# சமய சந்திதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.20

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா இன்றுபுதன்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

இந்த ஆலய பெருந் திருவிழா கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (203)

* * *

நல்லூர், ஆடியபாதம் வீதி வாலை அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (203)

* * *

நெடுந்தீவு மேற்கு, கரமத்தைகந்தசுவாமியார் ஆலய தேர், தீர்த்தத் திருவிழாக்கள் நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ளன.

தேர்த்திருவிழா முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மாலை 4 மணிக்கும் இடம் பெறும்.

மறு நாள் வெள்ளிக்கிழமை பூங்காவனம், கல்யாணம் என்பனவும் இடம் பெறும். (203-111)


## திறப்பு விழா

**நல்லூரில்,**

**நாளை (21.02.2008) வியாழக்கிழமை**
**மங்களகரமாக**

**ORION MULTIVISION**

லயன் **K.விஜயரட்ணம்** (J.P) அவர்கள்

நேரம்:
**காலை 8 - 9 மணி**

* வீடியோ படப்பிடிப்பு
* புகைப்படப்பிடிப்பு
* டிசைனிங் வேலைகள்
* கணனிசார் வேலைகள் மற்றும் விற்பனை
* CD மற்றும் VCD வேலைகள்

உரிமையாளர் - P.பாலமுகுந்தன்

**521, பருத்தித்துறை வீதி, நல்லூர்.**



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அபிவிருத்திச்
சங்க உறுப்பினர்

**கந்தையா சிவதாசன்** (சிவா)

அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீர்வேலி.
**கல்லூரிச் சமூகம்,**
அத்தியார் இந்துக் கல்லூரி.
(71259)



## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்ப்பாணப் பிரதேச
கலாசாரப் பேரவையின்
நிர்வாக சபை உறுப்பினரும்,
பேரவையின் கலைத்துவ
ஆர்வலனுமாகிய

**அமரர்**

**என்.எஸ்.ஜெயசிங்கம்**

அவர்களின் அமரத்துவச் செய்தி அறிந்து ஆறாத்துயரடைகின்றோம். அவர் கலைத்துவ சமூகத்திற்கு ஆற்றிய பணிகளை நினைவு கூர்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.பிரதேச கலாசார பேரவை**
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.
(71263)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை இல்லாது ஒழிக்க பொதுமக்கள் ஒத்துழைப்புத் தேவை

## பொலிஸ்மா அதிபர் கோருகிறார்

கொழும்பு, பெப். 20

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான பாதுகாப்புப் படையினர் பல்வேறு வகையிலும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் பொதுமக்களின் ஒத்துழைப்புடனேயே பயங்கரவாதத்தை ஒழிக்க முடியும். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைக்க வேண்டும்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையிலே சிவில் பாதுகாப்பு குழுக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கான நடவடிக்கை மத்திய நிலையம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான அறையினைத் திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பொலிஸ்மா அதிபர் இதனைக்கூறினார்.

பொலிஸ் மா அதிபர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பயங்கரவாதத்தை தோற்கடிக்க வேண்டுமாயின் அதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. அதற்கமைவாகச் சிவில் பாதுகாப்புக் குழுக்களை நிறுவுவது தொடர்பான வேலைத்திட்டம் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

அரசின் அனுசரணையில் மக்களின் ஒத்துழைப்புடன் நிறுவப்படுகின்ற சிவில் பாதுகாப்பு குழுக்களின் சக்தியின் மூலமாகப் பயங்கரவாத அமைப்புகளை சீர் குலைக்க முடியும். இந்த நடவடிக்கையை முன்னெடுத்து செல்லவிடாது காலை இழுப்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தக் குழுக்கள் சகல கிராம மட்டங்களிலும் நிறுவப்படும்.

சில சந்தர்ப்பங்களில் மக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கின்ற நிலை ஏற்படுகின்றது. அந்த நிலைமையை மாற்றிய மைத்து மக்கள் படையினருக்கு உடனுக்குடன் தகவல்களை வழங்குகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.- என்றார். (சி)

# ஆயுதங்களுடன் மூன்று சிங்களவர் வெலிகந்தையில் கைது

கொழும்பு, பெப். 20

பொலனறுவை வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளை வைத்திருந்த மூன்று சிங்களவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்ட இவர்கள் வெலிகந்தைப் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டுள்ளதுடன் கூலித்தொழில் செய்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான என்.கே. இலங்ககோன் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:

கொலகனவாடிய செவனபிட்டியவைச் சேர்ந்த முதுகமகேலாகே தர்மசேன எனும் தர்மே (வயது - 27), மஹாவெள செவனபிட்டியவைச் சேர்ந்த முதுகமலாகே ரஞ்சித் (வயது - 31) மற்றும் தொன் ஜினதாசலேகே சமிந்த கருணாசேன (வயது - 32) ஆகியோரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஆயுதமுனையில் கப்பம் பெறமுயற்சி வவுனியா தோணிக்கல்லில் சம்பவம்

வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயுதமுனையில் குடும்பம் ஒன்றை மிரட்டிக் கப்பம் பெறமுயன்ற இருவரில் ஒருவரின் துப்பாக்கியை அக்குடும்பத்தினர் பறித்தெடுத்ததை அடுத்து அவர் தனது முயற்சியைக் கைவிட்டு தப்பியோடியிருக்கிறார். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வவுனியா தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிக்குச் சென்ற ஆயுதக்குழுவைச் சேர்ந்த இருவர் அங்கிருந்தவர்களைத்துப்பாக்கி முனையில் மிரட்டி கப்பம் தருமாறு கோரியுள்ளனர்.

இதனையடுத்து அங்கிருந்தவர்களுக்கும் மேற்படி நபர்கள் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றி இழுபறி நிலை ஏற்பட்டது.

இந்த இழுபறி நிலையின் உச்ச கட்டமாக அவர்களில் ஒருவரிடமிருந்து துப்பாக்கியை வீட்டில் இருந்தவர்கள் பறித்தெடுத்துள்ளனர்.

இதனையடுத்து, துப்பாக்கியைக் கைவிட்டுவிட்டு வந்த இருவரும் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

இந்த இழுபறியின்போது மேற்படி துப்பாக்கியில் இருந்து இருதடவைகள் சூடு நடத்தப்பட்டது. எனினும் எவருக்கும் இதனால் பாதிப்பு ஏற்படவில்லை. இச்சம்பவம் குறித்து உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. (சி)

# குடாநாட்டுக்கு பாடசாலைகளுக்கு கப்பல் மூலம் பாட நூல்கள்

கொழும்பு, பெப். 20

யாழ்.குடாநாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தேவைப்படும் 5 லட்சம் பாட நூல்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டுக்கு அனுப்புவதற்காக பாட நூல்கள், அத்தியாவசிய உணவு வகைகள், உலருணவுகள், கூரைத் தகடுகள் மற்றும் சீமெந்து ஆகிய பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் 'மேர்க்ஸ் யால' என்ற கப்பலில் ஏற்றப் பட்டுள்ளன. இவற்றின் மொத்த நிறை 1,500 மெற்றிக் தொன்களாகும்.

அத்தியாவசிய சேவைகள் பிரதி ஆணையாளர் ரியல் அட்மிரல் எச்.எஸ்.ரத்னகீர்த்தி மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்ப் பகுதித் தலைவர் லெனின் மதிவண்ணன் ஆகியோரின் மேற்பார்வையில் இப்பணிகள் நடைபெற்றன.

குடாநாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தேவைப்படும் 6 லட்சம் பாடநூல்கள் கடந்த டிசம்பர் மாதம் அனுப்பிவைக்கப் பட்டன. மேலும், 5 லட்சம் பாடநூல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பாடநூல்கள் 575 மெற்றிக்தொன், 400 மெற்றிக்தொன் உணவு வகைகள், சிமெந்து, கூரைத் தகடு உட்பட மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் 600 மெற்றிக் தொன் என்பன கடந்த வெள்ளியன்று கப்பலில் ஏற்றப்பட்டன.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏ- 9 பாதை வழியான தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டதை அடுத்து, யாழ். குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கடல் மார்க்கமாகவே அனுப்பப்படுகின்றன. இச்சேவையில் 10 கப்பல்கள் இப்போது ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

*யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தால் நடத்தப்பட்ட பொது அறிவு, நுண் அறிவுத் தேடல் போட்டியில்வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.*

*போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் வி.வாகிசனுக்கு நிகழ்வின் பிரதம விருத்தினரான யாழ்.றோட்டறக்ட் கழக தலைவர் றொட்டேறியன் கே.பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கம் அணிவிப்பதை முதலாவது படத்தில் காணலாம்.*

*முதல் 10 இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை*




*நியூ பிரசாந்தி நகை மாளிகை உரிமையாளர் ஏ.கமலநாதன் வழங்கிக் கௌரவித்தார். மாணவர் ஒருவருக்கு அவர் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்தில் காணலாம்.*

# "நான் குடிக்கப் போகும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?"

ஆண்டவர் தமது வாழ்வில் பல நன்மைகளைச் செய்து , குணமாக்கல்களை அளித்த போதும், சமுதாயத்தில் உயர்ந்தவர்கள், மதத்தலைவர்கள் என கருதப்பட்டவர்களால் மறுதலிப்புகள், ஒதுக்கல்கள், தடங்கல்கள் என்பவற்றைச் சந்தித்தார். அவற்றின் உச்சக் கட்டம்தான் இந்தப் பாடுகளும் மரணமும். ஆனால் அவரது வெற்றி இயேசுவின் உயிர்ப்பில் வெளிப்பட்டது.

ஆண்டவர் இயேசு எவ்வாறு துன்பக்கிண்ணத்தைக் கையாண்டார்? ஒலிவ மலையில் அவர் தந்தையுடன் செபத்தில் ஒன்றித்திருந்தபோது இயேசு இந்தப் பாடுகள், மரணத்தை உய்த்துணர்ந்தார், இறைத் தந்தையின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டார்.

எங்களில் யாருக்குமே எமது வாழ்வில் துன்பத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லை. விட்டு விலகி ஓடிவிடவே ஆசைப்படுவோம், முயற்சிப்போம். ஆனால் பல வேளைகளில் துன்பத்தை விலக்க முடியாது திணறுகின்றோம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு துன்பத்தை அனுபவித்து கடந்து செல்ல முயற்சிக்கிறோம், எவ்வாறு அதை ஏற்றுக் கொள்கிறோம். இயேசு இறைத்தந்தையின் அருளுடனும் பலத்துடனும் இத்துன்பத்தை ஏற்றார், அனுபவித்து அதனை மேற்கொண்டார். எனவே நாம் ஆண்டவர் இயேசுவைப் போல் துன்பத்தை இறையுறவின் பலத்ததோடு சந்திப்போம்.




இன்றைய சூழ்நிலையில் மகிழ்ச்சி என்பது மிகவும் பெறுமதி மிக்க அரிய பொருளாகி விட்டது.எங்கு பார்த்தாலும், போரும் இழப்புகளும், வேலை இன்மையும், வறுமையும், பட்டினியும் அதனால் ஏற்பட்ட துன்பமும், சோகமும், உடல் நோய், மனநோய் என்பனவே தென்படுகின்றன.

எனவே, எம் ஒவ்வொருவருக்கும் நேரிடுகின்ற துன்பத்தை ஏற்று வாழ, அதனை மேற்கொள்ள மனிதனால் தரமுடியாத ஆன்மீக பலம் அல்லது அருள் தேவைப் படுகின்றது.

இதற்குச் செபம் அல்லது இறைவனோடு ஒன்றித்திருப்பதற்கு ஒரு குறிப்பிட்ட மணித்துளிகளை காலை, இரவு என ஒதுக்கி செபம் செய்வது அவசியமாகிறது. அது மட்டுமல்லாமல் நேர்மையான, அன்பான வாழ்வை வாழ்வதன்மூலம் வாழ்வே செபமாகும் பொழுது துன்பங்களை ஏற்று மேற்கொள்வது [illegible] எமது உள்ளத்திலும் மன அமைதியும், தெய்வீகமும் உருவாகிறது. - [illegible]

# நடமாடும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் புலிகளுக்காக செஞ். குழுவினரால் தருவிப்பு!

## சுகாதார அமைச்சு அதிகாரி தகவல் என்கிறது சிங்களப் பத்திரிகை

கொழும்பு,பெப்.20

"அரச படைகளினால் விடுவிக்கப் படாத பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு என்ற பெயரில், நடமாடும் சத்திரசிகிச்சைக் கூடங்களுக்கான - சுமார் பத்துக்கோடி ரூபா பெறுமதியான - மருந்துகள் மற்றும் உபகரணங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் கொண்டுவரப்பட்டுள்ளன.

"ஆனால் இவை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்குவதற்காகவே கொண்டு வரப்பட்டுள்ளன என்பதில் சந்தேகமில்லை."

- இப்படி சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று அவரை மேற்கோள்காட்டி சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

சுமார் ஆறாயிரம் கிலோ எடை கொண்ட இந்த உபகரணங்கள் 232 பொதிகளில் எடுத்துவரப்பட்டுள்ளன.

போரின்போது பெரும் காயங்களுக்கு உள்ளாகும் ஆள்களுக்கு அந்த இடத்திலேயே நேரடியாகச் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனத் தெரிவித்த அந்த அதிகாரி, இந்த மருந்துவகைகள் கென்யாவின் நைரோபி நகர செஞ்சிலுவைச் சங்கத்தினால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன என மேலும் தெரிவித்தார்.

### 50 ஆஸ்பத்திரிகளின் தேவைக்கென கொண்டுவரப்பட்டுள்ளதாம்

இந்த மருந்துவகைகள் விடுவிக்கப் படாத பிரதேசங்களிலுள்ள 50 வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்கெனத் தெரிவித்தே இங்கு தருவிக்கப்பட்டுள்ளன.

இந்த மருந்துவகைகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் இலங்கைச் சுங்கத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

அவற்றை விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதற்காகக் கடந்த 15 ஆம் திகதி சுகாதார அமைச்சின் சிபார்சு கோரப்பட்டுள்ளது. ஆயினும் நேற்று முன் தினம் மாலைவரை அதற்கான சிபார்சு வழங்கப்படவில்லை.

ஆனாலும், முன்னணி அமைச்சரொருவர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு இந்த சிபார்சை வழங்குமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார் என சுகாதார அமைச்சின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

- இப்படி அந்த நாளிதழின் செய்தியில் மேலும் கூறப்பட்டிருந்தது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

பிரபல ஜப்பானிய இலத்திரனியல் நிறுவனத்திற்கு (Sony, Panasonic, Kenwood) சாதாரண ஆங்கில அறிவுடைய 18-28 வயதுக்கு உட்பட்ட பெண்களும், 18 - 35 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் உடனடியாகத் தேவை.

**சம்பளம்** - பெண் - RM 800 - RM - 25,000/-

ஆண் - RM 800 - RM - 1300 - 25,000/- - 40,300/-

தங்குமிட வசதி, மருத்துவ சேவை, பிரயாணச் சீட்டு இலவசம்

கடவுச்சீட்டும், 10 நிழற்படங்களும் (Passport size Photo) சுயவிவரத்துடன் (BIO-DATA) கீழ்காணும் முகவரியில் 22-02-2008 தொடக்கம் 23.02.2008 வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

**227, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.**

*(பாண்டியன் தாழ்வு வைரவர் கோயிலுக்கு அருகாமையில்)* (சி/551523)

## சுத்திகரிப்பாளர் தேவை

எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுத்திகரிப்புச் சேவைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கிளீன் வெல் (த-து) வ-து**
**866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.** (சி/551525)

## நினைவலைகள்



*கோண்டாவில் கிழக்கு*

**அமரர் க.வே.சரவணமுத்து திருமதி ச.ஆயிலியம்**

தோற்றம் 10-11-1918 மறைவு 20-02-2006
தோற்றம் 10-06-1937 மறைவு 15-12-1993

*தர்மத்தின் வழிநின்று எங்களுக்கு அறநெறிகளை*
*வழங்கிய அன்புத் தெய்வங்களின் ஆத்மா*
*சாந்தியடைய எல்லாம் வல்ல அற்புதநர்த்தன*
*விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.*

இவர்களின் நினைவாக இன்று (20.02.2008) புதன்கிழமை கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகேஸ்வர பூசையிலும் (அன்னதானம்) பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அன்பு உள்ளங்கள்:*
**பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.**

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (71220)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



**இராமகிருஸ்ணன் நாகராசா பத்தர்**

மலர்வு: 01.06.1949

உதிர்வு: 01.03.1999

திதி: சதுர்த்தசி
(20.02.2008)

*அன்பான அப்பாவே!*
*உயிரிலும் மேலாக எம்மை நேசித்தீர்கள்*
*ஊரார் போற்ற உத்தமராய் வாழ்ந்தீர்கள்*
*காலமெல்லாம் கண்ணீர் சிந்த விட்டு*
*எங்கு சென்றீர்கள் அப்பா!*

உங்கள் பிரிவால் துயருறும்:
**அம்மா, மனைவி, சகோதரர்கள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ஸ்ரீ லக்சுமி ஜுவெல்லறி,
220A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [71216]

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.20

கைதடி- நாவற்குழி அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.20

கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற இருக்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினரா தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.சத்திய நாதன் கலந்து கொள்வார். (203-288)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

## வலி.மேற்கு கலைஞர்கள் கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

சங்கானை, பெப்.20

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த ஆண்டுக்கென வழங்கப்படவுள்ள கலாபூஷண விருதிற்கு வலிகாமம் மேற்கு பிரதேச கலைஞர்களையும் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

சிற்பம், நடனம், ஓவியம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டுப்புறவியல், ஊடகத்துறை, சினிமா போன்ற கலைத்துறைகளில் சேவையாற்றி 60 வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்கள் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

வலிகாமம் மேற்கிலுள்ள கலைஞர்கள் விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகத்தில் பெற்று எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202-29)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
[71163] 19, முருகேசர் லேன், நல்லூர்.

## விற்பனைக்கு

புறொயிலர் 3Kg மேற்பட்டது விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தது 550/=, கல்பேட், ஊர்ச்சேவல்களும் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**நந்தன் பாம்**
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (சி/551526)

சிவமயம்

## உபநயன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் மாசித் திங்கள் 9ஆம் நாள் (21.02.2008) வியாழக்கிழமை மகநட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 8 மணி முதல் 9.30 மணிவரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

அனலை.புளியந்தீவு அமரர் பிரம்மஸ்ரீ சி.நடராசக் குருக்கள் அவர்களின் பௌத்திரனும்
யாழ். நீராவியடி அமரர் பிரம்மஸ்ரீ செ.பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் தௌஹித்திரனும்
எமது கனிஷ்ட புத்திரனுமாகிய

**செல்வன் மகோதரசர்மா அவர்களுக்கு**

சௌள, உபநயன, பிரம்மோபதேசம் செய்ய அனலை. புளியந்தீவு நாகேஸ்வரப் பெருமான் திருவருளும் யாழ்.நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகப்பெருமான் திருவருளும், குருவருளும் கூடிய ஆசியுடன் மேற்படி சுபமுகூர்த்தம் திருக்கேதீச்சர ஆலயமண்டபத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து.

வரவேற்பாளர்கள்:
**சிவஸ்ரீ மனோகரக்குருக்கள் ரதி தம்பதியினர்,**
**பிரம்பஸ்ரீ ஐங்கரசர்மா ஸ்ரீ வித்யாதர்ஷினி தம்பதியினர், மன்னார்.**
T.P.: 023 2222065

**சிவஸ்ரீ ந.தமோதரக்குருக்கள், வல்லவாம்பிகை தம்பதியினர், நீராவியடி.**
T.P.: 0775212697

(71244)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 15 02 1924
விண்ணில் 21 01 2008



திருமதி

## பேதுருப்பிள்ளை எட்லீசம்மா

*ஆண்டவரை நாடுவோர் அவரைப் புகழ்வாராக*
*அவர்கள் இதயம் என்றென்றும் வாழ்வதாக"* (திரு.பா - 22:26)

**பாசம் எனும் நதியினிலே நீராட்டி**
**பண்பு எனும் தொட்டிலிலே தாலாட்டி**
**ஆசையுடன் எமைவளர்த்து ஆளாக்கி**
**அகிலமிதைப் புரியவைத்த அன்னையே!**

**பேசவொரு வார்த்தை இன்றிப் புலம்புகின்றோம்**
**பெருந்துயரில் மூழ்கி யாமும் கலங்குகின்றோம்**
**தேசமுள்ளவரை நினைவலைகள் தொடருமம்மா**
**தேவனுக்குள் கலந்திட்ட அன்புத் தாயே!**


எங்கள் அன்புத்தாயின் மரணசெய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் வெளியிட்டோர், மலர்வளையம் வைத்தோர் இன்னும் எமக்குப் பல வழிகளில் உதவிகள் புரிந்த எங்கள் அன்பு உள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

28/3, புனித ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (71194)

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 18 . 04 . 1942



உதிர்வு 14 . 02 . 1995

**அமரர் தியாகராசா அரசரத்தினம்**

*(இளைப்பாறிய சாரதி- இ.போ.ச.)*

*திதி: 20.02.2008*

**எங்கள் அப்பாவே!**
**உங்களுடன் பகிர்ந்து கொண்ட**
**அன்பு, அறிவு, அறம், ஆற்றல்**
**அனுபவங்களில் நாம் வாழ்கின்றோம்.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் வேண்டுகின்றோம்.


தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (71224)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டோனி, யுவராஜ்சிங் கைகொடுக்க சாதித்துக்காட்டியது இந்திய அணி

## இலங்கை 2 விக்கெட்டுகளால் தோல்வி




யுவராஜ்சிங்

அடிலெய்ட், பெப்.20

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரின் நேற்றைய இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றிபெற்றது. யுவராஜ் சிங் 76 ஓட்டங்களையும், டோனி இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்து 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு பக்கபலமாகவிருந்தனர்.

அடிலெய்ட்டில் நடந்த இந்த ஆட்டத்தில் 239 ஓட்டங்கள் என்ற இலக்கைத் துரத்திய இந்திய அணி 5 பந்துகள் மீதமிருக்க 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியைப் பதிவு செய்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்கள் அணிக்கு சரியான அடித்தளம் அமைத்துக் கொடுக்கத் தவறினர். ஆரம்ப வீரான சச்சின் டெண்டுல்கர் ஓட்டமெதுவும் பெறாமல் மலிங்கவின் வேகத்தில் 'போல்ட்' ஆனார்.

தொடர்ந்து களமிறங்கிய உத்தப்பா வெறும் 10 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' ஆனார். பொறுமையாக ஆட எண்ணிய மற்றைய ஆரம்ப வீரரான கம்பீரை அமரசிங்கவின் பந்து வீச்சு பவிலியன் திருப்பியது. 34 பந்துகளை எதிர்கொண்ட அவர் 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். கம்பீர் ஆட்டமிழந்தபோது இந்தியா 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

4ஆவது விக்கெட்டில் இணைந்த ரோகித் சர்மா, யுவராஜ் சிங் ஆகியோர் அணிக்கு நம்பிக்கையளிக்கும் விதத்தில் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இருவரும் தம்மிடையே 64 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில் ரோகித் சர்மா 24 ஓட்டங்களுடன் முரளியின் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

மறுமுனையில் நின்ற யுவராஜ் சிங் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். 70 பந்துகளை எதிர்கொண்டு 76 ஓட்டங்களை விளாசியிருந்த நிலையில் சமிந்த வாஸின் அபாரமான 'ஜோக்கர்' ஒன்றில் பரிதாபகரமாக 'போல்ட்' ஆனார் யுவராஜ். தனது ஓட்டஎண்ணிக்கையில் 10 பவுண்டரிகளையும், ஒரு சிக்ஸரையும் அவர் சேர்த்திருந்தார். அவர் ஆட்டமிழக்கும் போது இந்தியா 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 158 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து இணைந்த டோனி, பதான் ஜோடி அணியை வெற்றி நோக்கி வழிப்படுத்தியது. இருவரும் இணைந்து 58 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அமரசிங்கவின் வேகத்தில் பதான் 31 ஓட்டங்களுடன் 'போல்ட்' ஆனார்.

தொடர்ந்து வந்த வீரர்களான பிரவீன் குமார் 6 ஓட்டங்களுடனும், ஹர்பஜன் சிங் 3 ஓட்டங்களுடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். எனினும், மறுமுனையில் நம்பிக்கை தந்த அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்து அணியை கடைசி ஓவரின் முதலாவது பந்தில் வெற்றிக் கரை சேர்த்தார்.

கடைசிவரை ஆட்டமிழக்காமலிருந்த டோனி 68 பந்துகளில் 50 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். தனது ஓட்டஎண்ணிக்கையில் அவர் பவுண்டரியையோ, சிக்ஸரையோ பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது அவரது 20ஆவது அரைச்சதம் ஆகும்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் அமரசிங்க 3 விக்கெட்டுகளையும், மலிங்க 2 விக்கெட்டுகளையும், முரளி மற்றும் வாஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 238 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்ப வீரர்களான டில்சான் (4), ஜெயசூரியா (0) ஆகியோர் கோட்டைவிட்டனர். 3ஆவது விக்கெட்டில் இணைந்த சங்ககார, மஹேல ஆகியோர் அணியை ஸ்திரமான நிலைக்கு அழைத்துச் சென்றனர். இருவரும் தம்மிடையே 153 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் மஹேல 71 ஓட்டங்களுடன் (99 பந்துகள், 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) 'ரன் அவுட்' ஆனார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் எவரும் பெரிதாகச் சோபிக்கவில்லை. எனினும், ஒரு முனையில் சிறப்பாக ஆடிய சங்ககார ஒருநாள் போட்டிகளில் 7ஆவது ஒருநாள் சதத்தை நிறைவுசெய்து அசத்தினார். 155 பந்துகளை எதிர்கொண்டிருந்த அவர் 128 ஓட்டங்களை 12 பவுண்டரிகளுடன் பெற்றுக்கொடுத்திருந்தார். அபாரமாக ஆடிய அவருக்கே போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருது வழங்கப்பட்டிருந்தது. இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் இந்திய அணிக்கு 4 புள்ளிகள் கிடைக்கப்பெற்றன.

# ஆஸியின் பாக். பயணம் ரத்து?

சிட்னி, பெப். 20

ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தான் பயணத்தை ரத்துச் செய்வது என முடிவு செய்திருப்பதாக அந்நாட்டு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தானில் விஜயம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாட வேண்டும். எனினும், பாகிஸ்தானில விளையாடுவது பாதுகாப்பானதல்ல என்று ஆஸ்திரேலியா கருதுவதால் இந்த சுற்றுப்பயணம் ரத்தாகலாம் எனக் கூறப்பட்டது. பாகிஸ்தானில் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அளித்த உறுதிமொழியை மீறி ஆஸ்திரேலியா தனது சுற்றுப் பயணத்தை ரத்துச் செய்வதென முடிவு மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆஸ்திரேலியா, பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளத் தவறினால் இந்தியா அல்லது இலங்கையுடன் ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடப் பாகிஸ்தான் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

விளையாட்டு அரங்குகளில்

# இந்தியாவில் குடியேறுகிறார் அக்தர்

மும்பை, பெப். 20

ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என வர்ணிக்கப்படும் பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் சொய்ப் அக்தர் இந்தியாவின் மும்பை நகரில் குடியேறத் திட்டமிட்டுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இந்தியன் பிறீமியர் லீக்கில் இணைய முடிவு செய்துள்ள அவர் அடுத்த 3 ஆண்டுகள் மும்பையில் வசிக்கத் திட்டமிட்டுள்ளார். அடுத்த 3 ஆண்டுகளுக்கு இந்தியாதான் தனது வசிப்பிடமாக இருக்கும் என்றும், அதற்காக விஸா பெறுவதில் சிக்கல் எதுவும் இருக்காது என நம்புகின்றார் என்றும் அக்தர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவைத் தாம் மிகவும் நேசிக்கின்றார் என்றும், இங்குள்ளவர்கள் தன்மீது மிகுந்த அன்பு செலுத்துகின்றனர் என்றும் சொய்ப் அக்தர் தெரிவித்துள்ளார். இந்தியன் பிறீமியர் லீக்கில் மும்பை அல்லாத வேறு அணியில் தாம் விளையாட நேர்ந்தாலும் தமக்கு மிகவும் பிடித்தமான நகரமாக மும்பை இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பிடல் காஸ்ட்ரோ ஓய்வு

ஹவானா, பெப்.20

நோய்வாய்ப்பட்டுள்ள கியூபத் தலைவர் பிடல் காஸ்ட்ரோ, நாட்டை வழிநடத்தும் ஜனாதிபதியாகவோ, படைத்தள கர்த்தராகவோ இனியும் தாம் பதவிகள் வகிக்கப்போவதில்லை என அறிவித்துள்ளார். இராணுவப் புரட்சியின் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றி, 49 ஆண்டுகள் தொடர்ச்சியாக கியூபாவின் தலைவராகத் திகழ்ந்து வந்த இவர், தற்போது தாம் ஓய்வுபெறப் போகின்றார் என அறிவித்துள்ளார்.


எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி, தேசிய பேரவை கூடும்போது, புதிய ஜனாதிபதி பதவித் தவணைக்காக தான் போட்டியிட மாட்டார் என்று 81 வயதான பிடல் காஸ்ட்ரோ கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வ கம்யூனிஸ்ட் ஏடான 'கிரேன்மா' இதனை வெளியிட்டுள்ளது.

''எனது அன்பான தோழர்களே, சமீப நாள்களில் நாடாளுமன்ற உறுப்பினராக என்னைத் தெரிவுசெய்ததன் வாயிலாக எனக்கு மகத்தான கௌரவத்தைக் கொடுத்துள்ளீர்கள். அதேவேளை, நாட்டின் பேரவைக்குத் தலைவராகவோ, படைத் தளகர்த்தராகவோ பதவி வகிக்க அபிலாஷை கொள்ளமாட்டேன். ஏற்றுக்கொள்ளவும் முன்வர மாட்டேன். இவற்றிற்காக அபிலாஷை கொள்ளவோ, இவற்றை ஏற்றுக்கொள்வோ மீள முயல மாட்டேன்.'' - என்று தனது கடிதத்தில் காஸ்ட்ரோ சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய பேரவை என்றோ, சட்டசபை என்றோ அழைக்கப்படும் அமைப்பு, காஸ்ட்ரோவுக்குப் பதிலாக, அவரின் இளைய சகோதரரான 76 வயதான ரவூல் காஸ்ட்ரோவைத் தலைவராகத் தெரிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. சுகவீனமுற்றதையடுத்து, பிடல் காஸ்ட்ரோ கடந்த 19 மாதங்களாக பொது வைபவங்களில் பங்குபற்றுவதைத் தவிர்த்து வந்துள்ளார்.

பிடல் காஸ்ட்ரோவிற்கென 1958ஆம் ஆண்டு, பிரதம தளகர்த்தா பதவி உருவாக்கப்பட்டது. அப்போது அவர் கெரில்லா இயக்கத் தலைவராகவிருந்தார். இந்த அமைப்பு கிழக்கு கியூபாவின் மலைப் பிராந்தியங்களில் முனைப்புடன் செயல்பட்டது. இந்த அமைப்பால் புரட்சியின் மூலமாக அமெரிக்காவின் ஆதரவுடன் இயங்கிவந்த சர்வாதிகாரி புல்ஜின்சியோ பெடி ஸ்டாவின் ஆட்சி 1959 இல் கவிழ்க்கப்பட்டது. பிடல் காஸ்ட்ரோ நாட்டின் தலைவரானார்.

''இது நான் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன் என்ற அர்த்தமாகாது. சிந்தனை மோதல்களில் ஒரு போர் வீரனைப்போல சமர் புரிவேன். இதுவே எனது ஒரே விருப்பம்.



தோழர் பிடலின் பிரதி பிம்பங்கள் என்ற தலைப்பில் நான் தொடர்ந்து எழுதிவருவேன்.'' - என்றும் அவர் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

''இது உங்களால் கணிப்பீடு செய்யப்படும். மற்றுமொரு ஆயுதமாகவும் இருக்கலாம். சிலவேளை எனது குரலையும் செவிமடுப்பீர்கள். நான் எச்சரிக்கையாக இருப்பேன்.'' - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவுக்கான தனது தூதுவரை மீள அழைத்துக்கொண்டது சேர்பியா

பெல்கிரேட், பெப்.20

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரித்தமைக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் பொருட்டு சேர்பியா அமெரிக்காவுக்கான தனது தூதுவரை மீளப் பெற்றுக் கொண்டுள்ளது. அத்துடன், 'அமெரிக்கா சர்வதேச சட்டத்தை ஆக்கிரமித்துள்ளது.' - என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

''கொசோவோ சேர்பியாவின் ஒரு பகுதி. இதனைத் துண்டாட முடியாது. சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரித்த ஏனைய நாடுகளுக்கான எமது தூதுவர்களும் மீள அழைக்கப்பட்டு விடுவார்கள்.'' - என சேர்பிய பிரதமர் லொஜிஸ்லேவ் கொஸ்டுனிகா அறிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவுக்கான எமது தூதுவர் மீள அழைத்துக் கொள்ளப்பட்டமை எமது முதல் அவசர நடவடிக்கையாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். புதிய நாட்டின் சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரித்துள்ள பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி ஆகியவற்றிலிருந்தும் எமது தூதுவர்கள் விரைவில் மீள அழைக்கப்பட்டுவிடுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்துக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகாரம்

நியூயோர்க், பெப்.20

சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்ட கொசோவோவை அமெரிக்காவும் முக்கிய ஐரோப்பிய நாடுகளும் அங்கீகரித்துள்ளன.

சேர்பியாவிலிருந்த கொசோவோ மாகாணம் கடந்த ஞாயிற்றுக்கிழமை, அல்பேனியத் தலைவர்களால் சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

சுதந்திர கொசோவோவை அங்கீகரிக்குமாறு கொசோவோத் தலைவர்கள் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகியவை உட்பட 192 நாடுகளுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்கள். அதேவேளை, ஸ்பெயின் உட்பட சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தை ஆட்சேபித்துள்ளன. ஸ்பெயினிலும், பல தசாப்தங்களாக பாஸ்க் தீவிரவாதிகள் பிரிவினைப் போராட்டத்தை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவும் சீனாவும் சேர்பிய ஜனாதிபதி டொடிக்கின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன. இவ்விரு நாடுகளும் வீட்டோ அதிகாரம் கொண்டவை. ரஷ்யா அணியில் சேர்பியா ஒரு பலம் பொருந்திய தேச நாடு ஆகும்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை உட்பட இதர நாடுகள் சுதந்திரப் பிரகடனம் சட்ட பூர்வமானது என தெரிவித்துள்ளன. இந்த நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதே தற்போதைய தேவை என நாடுகள் அறிவித்துள்ளனவென ஐ.நா.விலிருந்து பி.பி.ஸி.நிருபர் ஜேன் லிட்டில் தெரிவித்துள்ளார்.

பிரஸல்சில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தை அடுத்து முன்னணி வகிக்கும் ஐரோப்பிய நாடுகள் இச் சுதந்திரப் பிரகடனத்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன.

சுதந்திர கொஸோவோவை ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன், ஆஸ்திரியா, அமெரிக்கா, துருக்கி, அல்மேனியா, ஆப்கானிஸ்தான் ஆகியவை ஆதரிக்கின்றன.

ரஷ்யா, ஸ்பெயின், ரொமேனியா, சுலோவோக்கியா சைபிரஸ் ஆகியவை ஆட்சேபிக்கின்றன.

கொசோவோவின் புதிய கொடி, நீல வர்ணமுடையது. கொசோவோவின் மஞ்சள் நிற இலச்சினையைக் கொண்டது. முக்கிய இனமக்களைக் குறிக்குமுகமாக, ஆறு வெள்ளை நட்சத்திரங்கள் இதில் பொறிக்கப்பட்டுள்ளன. இப்புதிய கொடிகள் வீடுகளிலும் அலுவலகங்களிலும் பறக்கவிடப்பட்டுள்ளன. அதேவேளை, சேர்பியாவின் கட்டுப்பாட்டிலுள்ள வட கொஸோவோவில் சுதந்திரப் பிரகடனத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

உலக அரங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மதகுரு படுகொலை: 3 ஊர்காவலர் உட்பட 4 பேர் கைது!

## பணத்திற்காக நடத்தப்பட்ட கொடூரமாம்

கொழும்பு,பெப். 20

அம்பாறையில் வை.எம்.சி.ஏ. சந்திக்கு அருகில் வைத்து கடந்த ஞாயிறன்று இரவு கிறிஸ்தவ மதகுரு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் மூன்று ஊர்காவலர்கள் உட்பட நால்வரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

படுகொலையுடன் பிரபல வர்த்தகர் ஒருவருக்குத் தொடர்பு இருப்பதாகவும் -

அவர் சந்தேக நபர்களிடம் ஒருலட்சம் ரூபாவைக் கொடுத்து மதகுருவைக் கொலை செய்யுமாறு கேட்டுக்கொண்டார் என்றும் -

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இக்கொலைக்குத் தனிப்பட்ட விரோதமே காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர் (சி)

## கண்டி பாதுகாப்பு குறித்து ஆராய்வு

கண்டியில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டின் முன்னோடியாக அப்பகுதியின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா தலைமையிலான உயர் மட்டக்குழு ஒன்று நேற்று அங்கு விஜயம் செய்தது.

கண்டி பல்லேகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தில் ஜூலை மாதம் சார்க் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இதன்போது சார்க் மாநாடு நடைபெறும் இடத்தின் பாதுகாப்புக்கள் குறித்து பொலிஸ்மா அதிபர் தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் ஆராய்ந்தனர்.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பான ஒரு முடிவுக்கு வரும்.

30 தொடக்கம் 90 அலகுகள் வரையான மின்சாரப் பாவனைக்கு சிறிய அளவில் மின்கட்டணம் உயரும். இதேவேளை, இலங்கை மின்சார சபையில் நடைபெறும் ஊழல்கள் மற்றும் வீண் விரயங்கள் என்பவற்றைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

## ஆலையடிவேம்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைக்கு கூட்டிச் சென்றனர்.

அங்குவைத்து அனைவரும் தனித்தனியே தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது மக்கள் கைது செய்யப்பட்டனரா இல்லையா என்பது பற்றிய தகவல்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

விசேட அதிரடிப்படையினரின் இந்த நடவடிக்கையினால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. (சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்புச் செய்யப்படுகின்றன.

எதிர்வரும் 23 ஆம் திகதி வரையும் குடாநாட்டில் பாண் மற்றும் பணிஸ் வகைகளின் இப்போதைய விலைகளில் மாற்றம் ஏற்படாது என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (அ-2)

## நாசகார ஆயுதங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்களை வழங்கக் கூடாது என்பதே இந்திய அரசின் கொள்கையென்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா பாதுகாப்புத் திட்டங்கள் தொடர்பாக கூட்டு முயற்சிகளை மேற்கொண்டுள்ள நாடுகளுடன் ஆயுத ஏற்றுமதியில் ஈடுபடலாம் என்றும் அமைச்சர் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செய்தியாளர்கள் இலங்கை குறித்து விசேடமாகக் கேள்வியெழுப்பிய வேளை அமைச்சர் பதிலளிக்கத் தயங்கியுள்ளார்.

எனினும் செய்தியாளர்கள் மீண்டும் மீண்டும் கேள்வியெழுப்பவே அமைச்சர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களைத் தான் கொள்வனவு செய்வதை இலங்கை இப்போது ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், இவ்விவகாரம் தொடர்பான இந்திய அமைச்சரின் கூற்று மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையில் ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசு பயங்கரவாத நெருக்கடியை எதிர்கொள்வதால் அது பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றது என இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (சி)

# இலுப்பையடிச் சந்தி விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.பலாலி வீதி - நாவலர் வீதி சந்திக்கின்ற இலுப்பையடிச் சந்தியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணமானார்.

பலாலி வீதியில் யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் நாவலர் வீதியில் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு மோதுண்டு விபத்துக்குள்ளாகின. இவ்விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டி, யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காது நேற்றிரவு அவர் உயிரிழந்தார்.

யாழ். ஐயனார்கோயிலடியைச் சேர்ந்த சோமசுந்தரம் சதானந்தன்(வயது 38) என்பவரே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்தவர் ஆவார். இவர் வேலணையைச் சொந்த இடமாகக் கொண்டவர். (அ-2)

## மதவாச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அமைப்பாளருமான பி.எச்.சாந்தகுமார இந்தக் கையெழுத்து வேட்டையை ஒழுங்குசெய்திருந்தார்.

போக்குவரத்துத் தடையை நீக்கக் கோரும் மகஜர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. மதவாச்சி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ள ரயில் சேவையை வவுனியா வரை நீடிக்க வேண்டும் என்றும் கையெழுத்து மகஜரில் கோரப்பட்டுள்ளது.

மக்கள் சுதந்திரமாக பிரயாணம் செய்ய முடியாதவாறு தடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தத் தடை நீக்கப்பட்டு சுமுகமான நிலை ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் பிரதேசங்களில் இருந்து மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாக மோட்டார் சைக்கிளில் கூட மக்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதாக ஐ.தே.கவின் அமைப்பாளர் சொன்னார்.

இப்பிரதேசங்களின் விவசாய உற்பத்திப் பொருள்களைத் தென்பகுதிக்குக் கொண்டு செல்லமுடியவில்லை. சோதனைக் கெடுபிடிகள் காரணமாக வவுனியாவில் பொருள்களின் விலைகளும் அதிகரித்திருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

அந்தச் சோதனை நடவடிக்கைகள் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பதாக இருப்பதை சுட்டிக்காட்டி, உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பொதுமக்களின் கையெழுத்துக்களுடன் கூடிய மகஜரில் கோருவதாக அவர் மேலும் கூறினார். (அ)

## பெனாசிர், நவாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் மக்கள் மதவாதக் கட்சிகளையும் ஆளும் கட்சியையும் நிராகரித்துள்ளமை புலனாகியுள்ளது.

மேலும் ஜனாதிபதி முஷாரப்புக்கு எதிரான எதிர்ப்புணர்வுகளையும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி உள்ளதாகக் கருதப்படுகின்றது.

எனினும் ஜனாதிபதி முஷாரப் தேர்தல் முடிவுகளைத் தாம் ஏற்றுக்கொள்ளத் தயார் எனக் குறிப்பிட்டுள்ளதுடன், எந்தக் கட்சியுடனும் இணைந்து செயற்படவும் தாம் தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாகிஸ்தானில் தேசிய நல் லிணக்கத்திற்கும் முஷாரப் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத்தில் 79 ஆசனங்களைக் கொண்டிருந்த அடிப்படை மதவாதக் கட்சியான எம்.எம்.ஏ.இம்முறை 3 இடங்களில் மட்டுமே வென்றது. அவாமி தேசியக் கட்சி பத்து இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

இம்முறை 19 ஆசனங்களை வென்ற எம்.கியூ.எம். அணி தான் பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அரசு அமைக்க ஆதரவு வழங்கும் என அறிவித்துள்ளது.

இத்தகைய உதிரிக் கட்சிகளின் எம்.பிக்களில் இன்னும் முப்பது பேரின் ஆதரவு கிட்டுமானால் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

பெனாஸிர் பூட்டோவின் கணவர் அலி சதாரியே இப்போது மக்கள் கட்சிக்குத் தலைமை வகிக்கின்றார்.

ஆனால், அவரோ அல்லது மற்றைய முன்னாள் பிரதமரான நவாஸ் ஷெரிபோ இத்தேர்தலில் போட்டியிடவில்லை. அதனால் அவர்கள் இருவருமே உடனடியாகப் பிரதமர் பதவி ஏற்பதற்கு வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகின்றது. (அ-சி)

## திருமலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரப் பகுதியில் உள்ள மனையா வெளி, உவர்மலை, மூர் வீதி, விகாரை வீதி, சுமோதகம், ஜமாலியா போன்ற இடங்களில் கடந்த ஒன்றரை மாதங்களில் 34 நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

அண்மையில் பெய்த மழை காரண மாக சிறிய சிறிய தேக்கத்தில், ரின், டயர், கோம்பை, பிளாஸ்ரிக் பாத்திரங்களில் தங்கியிருக்கும் நீரின் ஊடாகவே இந் நோய்க்கான நுளம்புகள் பெருகுகின்றன. எனவே பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருந்து இவற்றை அகற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதிப்பிள்ளை கனகதாசன்

(முன்னாள் ஆசிரியர்)

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 314, பலாலி வீதி, கந்தர்மடத்தையும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய க.கனகதாசன் நேற்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றிஜிஸ்ரார் பொன்னையாவின் பேரனும் கனகசபாபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் அருந்தவராணியின் (ராணி) அன்புக் கணவரும் ஆர்த்திகா, தர்மிகாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந.தேவராசா
(மாஸ்டர்)

*314, பலாலி வீதி, கந்தர்மடம்.*
*021 4590395*
(A)

### சோமசுந்தரம் சதானந்தன்

(ஈசன் அழகுசாதன வியாபாரம்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சதானந்தன் நேற்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

*63, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி.*
(A)

### யோகராசா திருமலர்(மலர்)

நயினாதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராசா திருமலர்(மலர்) நேற்று 19.02.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் யோகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் பகவதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நாகராசா - யோகம்மா தம்பதியரின் மருமகளும் புவனேஸ்வரி(நயினாதீவு), விக்னேஸ்வரன்(ஹொலண்ட்), திலகேஸ்வரி (நயினாதீவு), கேதீஸ்வரன்(ஜேர்மனி), தர்மேஸ்வரி (அனலைதீவு), ஞானேஸ்வரன்(ஜேர்மனி), சிவனேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அபிஷாலினி, சரணீஸன், கோபிநாத், நவலோஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2008) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நயினாதீவு சல்லிபரவை மயானத் தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.யோகராசா
(கணவர்)

*6ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
(A)

PC PARK (PVT) LTD.
the path to computer paradigm
Rs.45,000.00
Pentium 4 Computer with 17"CRT Flat Samsung Monitor
3 Years Warranty
Free UPS & Dust Cover

| | |
|---|---|
| **Mother Boards** | |
| MSI P4M900M2 | Rs.6,400.00 |
| Asus P5P800S | Rs.7,500.00 |
| **Monitors** | |
| 17"CRT Samsung | Rs.13,000.00 |
| 17"LCD LG | Rs.25,000.00 |
| **Optical Drives** | |
| Combo Drive Samsung | Rs.3,500.00 |
| DVD Rom Samsung | Rs.3,000.00 |
| CD Rom Samsung | Rs.1,900.00 |
| 80GB SATA Hard Disk | Rs.5,750.00 |
| 80GB IDE Hard Disk | Rs.6,200.00 |
| **Ram** | |
| 1GB DDR-2 Ram Kingston | Rs.2,750.00 |
| 256MB DDR-2 Ram Kingston | Rs.1,500.00 |
| **UPS** | |
| Power Tree 650W | Rs.5,750.00 |
| Mercury 600W | Rs.6,250.00 |

Complied Warranty 01 Year
HP LaserJet 1005 Printer Rs.15,500.00
633,K.K.S Road Jaffna Hotline:0773951634
Tele Phone: 021 2229581
Poinpedro Road Nelliady Hotline:0773951628

N.C.A வெளியீடு
இணுவில்
1ஆம் தவணைப் பரீட்சை
★ தரம் 04 முதல் O/L வரை அனைத்துப் பாடங்களுக்குமான வினாத்தாள்கள்
தேவைப்படுவோர் 28.02.2008 முன் தொடர்பு கொள்ளவும்
0773618459, 0776241573
பரீட்சைத் திகதி 15.03.2008

மானிப்பாயில்..........
AutoCAD
Specially for Engineering Students!!
(Civil, Architectural, Mechanical & Surveying)
- வகுப்புக்கள் ஆரம்பம் - 23/02/2008 -
Certificate in Internet e - mail (10hrs - Online Class)
(வெளிநாடுகளில் இருக்கும் உறவினர்களுடன் Internet மூலம் தொடர்பை ஏற்படுத்துதல் போன்ற பல பயிற்சிகளை உள்ளடக்கியது)
- வகுப்புக்கள் ஆரம்பம் - 23/02/2008 -
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 [illegible]
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

THE SCIENCE CORNER
Clock Tower lane, Jaffna
உயிரியல்
சுயமதிப்பீட்டுப் பரீட்சை
2009 A/L Exam 03
நேரம் 3.00-5.00 p.m
2010 A/L Exam 02
நேரம் 11.00.12.00p.m
ஆரம்பம்:20.02.2008
(புதன்கிழமை)
சு.பொன.திவாகரன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org